ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

04.02.2015 - மலர் 11, இதழ் 49

PUBLIC LIBRARY
JAFFNA.



## 67 ஆவது சுதந்திர தின வாழ்த்துக்கள்...!

## 22,000 எறும்பு இனங்கள்

## ஞாயிற்றுத் தொகுதியின் உயரமான மலைகள்

ஒன்றாய் எல்லாம் பெறுவோமே
பெற்றதை நன்றாய் பகிர்வோமே
நட்புடன் சேர்ந்தே வாழ்வோமே
உண்மை சுதந்திரம் அடைவோமே...!

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. படத்தில் காணக்கூடிய ஏதேனும் 3 மரக்கறி வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

.............................................................................

2. பாய்ந்தோடும் நான், கெரட்டை விரும்பி உண்பேன். எனக்கு இரண்டு நீளமான காதுகள் உள்ளன. நான் யார்?

..............................................

3. இது பூர்ணாவின் .................................... ஆகும்.

(பூந்தோட்டம்/ பழத்தோட்டம்/ மரக்கறித்தோட்டம்)


4. காகம் - கரையும் என்பது போல; குதிரை -.................




1. இங்கிருக்கும் ஆங்கிலச் சொற்களை பொருத்தமான படங்களுக்குக்கீழ் எழுதுக.

2. சிவப்பு நிறத்தில் காணப்படும் பழங்கள் எவை?

......................................................



| | | | | | |
|---|---|---|---|---|---|
| Banana | Strawberry | Pear | Grape | Orange | Apple |

3. மேற்தோலை நீக்கிவிட்டு உண்ண வேண்டிய பழங்கள் எவை?


.......................................

4. கொடியில் காய்க்கும் பழவகை எது?

.......................................

1. கீழே வழங்கப்பட்டுள்ள சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(மரங்கள்/ புல்வெளியில்/ பசுக்கள்/ கற்பாறைகளும்/ மாலைவேளையில்)



அன்றொரு நாள் .......................... ஆற்றங்கரைப் .................................. நான்கு ...................... புல் மேய்ந்துகொண்டிருந்தன. புல்வெளியின் எல்லைப் பகுதியில் ஏராளமான ........................ வளர்ந்திருந்தன. அங்கு பெரிய ........................ காணப்பட்டன.

2. இங்குள்ள படத்தை அவதானித்து, இந்தப் பந்திக்குப் பொருத்தமான வகையில் மேலும் இரண்டு வாக்கியங்களை எழுதுக.

..............................................................

..............................................................

1. நிமலனின் சப்பாத்தின் நிறம் யாது?

.......................................................

2. இவர்கள் இருவரும் தமது கையில் வைத்திருப்பது;

1. நிறப்பெட்டி
2. கதைப்புத்தகம்
3. தொப்பி




3. அமலா தலையில் அணிந்திருப்பது என்ன?

.......................................................

4. நிமலன் அணிந்திருக்கும் உடைகளைக் குறிப்பிடுக.

.......................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த அகழ்வுப்பணிகளின்போது வெளிப்பட்ட

# எகிப்திய ஆலயம்



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

உலக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த ஒரு நகரமாக எகிப்தின் கிஸா நகரம் திகழ்கின்றது. பண்டைய உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றான ராட்சத பிரமிட்டும்கூட இந்த நகரை அண்டியுள்ள பாலைவனப் பகுதியிலேயே அமைந்துள்ளது. கிஸா நகர காவல்துறையினருக்கு அண்மையில் முக்கியமானதொரு தகவல் கிடைத்திருந்தது. நகரின் மத்தியில் அமைந்துள்ள வீடொன்றின் தோட்டப் பகுதியில் தொல்பொருட்களைத் தேடும் முகமாக சட்ட விரோதமான அகழ்வுப்பணிகளில் சிலர் ஈடுபட்டு வருவதாகவே அந்த தகவல் அமைந்திருந்தது. தகவல் அறிந்த காவல்துறையினர் அப்பகுதியினை சுற்றிவளைத்தபோது, அங்கு மிகவும் பழமை வாய்ந்த ஆலயம் ஒன்றின் இடிபாடுகளைக் காணமுடிந்துள்ளது.



மூன்றாம் துத்மோஸ் மன்னர்

### 3,400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது



சுற்பாறையொன்று



கண்டுபிடிக்கப்பட்ட சித்திர எழுத்துக்கள்



காவல்துறையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது...

வீட்டுத் தோட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இடிபாடுகளில் கற்தூண்கள், சுண்ணாம்புக் கற்பாறைகள் என்பனவும் இருந்துள்ளன. இந்த கற்பாறைகள் ஆலயத்தின் சுவர்களாக இருக்கக்கூடும் என அங்கு சென்ற அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்திருந்தனர். அதுமட்டுமன்றி, அவர்கள் 'ஹைரோக்ளிப்ஸ்' எனப்படும் சித்திர எழுத்துக்களையும் அங்கு கண்டுபிடித்தனர். அதற்கமைய, இது மூன்றாம் துத்மோஸ் மன்னரின் ஆட்சிக்காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த தோட்டப்பகுதியில் அகழ்வுப்பணிகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அப்பொழுது அங்கிருந்து பல முக்கிய விடயங்களைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் கெய்ரோ நகர தொல்பொருள் தகவல் துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### திருட்டுத்தனம் அகப்பட்ட விதம்

அகழ்வுப்பணிகளின்போது பெறப்பட்ட தொல்பொருட்கள் பல மாதங்களாக திருட்டுத்தனமாக விற்கப்பட்டு வந்துள்ளன. திருட்டுத்தனமாக மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த அகழ்வுப்பணிகளின்போது, அங்கிருந்த தண்ணீர்க் குழாயொன்றில் வெடிப்பு ஏற்பட்டதனால், இடிபாடுகள் இருந்த இடத்தில் நீர் நிரம்பியுள்ளது. இந்த சம்பவத்தை அடுத்தே காவல்துறையினருக்கு இது பற்றிய தகவல் கிடைத்துள்ளது.

### மூன்றாம் துத்மோஸ் மன்னன்

பண்டைய கால எகிப்தின் பொற்காலமாக மூன்றாம் துத்மோஸ் மன்னனின் ஆட்சிக்காலம் கருதப்படுகின்றது. துத்மோஸ் மன்னருக்கு இப்பதவி கிடைக்கும்போது, அவரது வயது இரண்டு ஆகும். கி.மு. 1479 இல் அவரது தந்தையார் மரணமடைந்ததை அடுத்தே, அவருக்கு மன்னர் பதவி கிடைத்துள்ளது. பதவியேற்று 22 ஆண்டுகள் வரை துத்மோஸ் மன்னர் தனது மாமியார் மற்றும் வளர்ப்புத்தாயாருடன் இணைந்து அதிகாரத்தினைப் பகிர்ந்துகொண்டு ஆட்சியை மேற்கொண்டுள்ளார். கி.மு. 1458 இல் வளர்ப்புத்தாயாரின் மரணத்தை அடுத்தே, துத்மோஸ் மன்னர் தனிநபராக ஆட்சியினை மேற்கொண்டு வந்துள்ளார். துத்மோஸ் மன்னரின் ஆட்சிக்காலத்தின் போது எகிப்திய பேரரசு சிரியாவின் வடக்கு வரையும், நைல் நதியின் முடிவு வரையும் பரவியிருந்ததாக வரலாற்று தகவல்கள் கூறுகின்றன.

-அஷ்வீதா

தமிழ் FM வானொலியில்
வார நாட்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை
'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...
விஜய் சந்தா பரிசைப் பெறுங்கள்...!



தகவல்கள், விஞ்ஞான விளக்கங்கள், கேள்விகள்,
கணிதப் புதிர்கள் - இன்னும் பல சுவையான
அம்சங்களோடு - ஆறாம் அறிவு!
தமிழ் FM ▶ வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீயவரின் தொடர்பு!

ஓர் ஊரில் செல்வந்தன் ஒருவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன், படிப்பில் சிறந்தவனாகவும் நற்பண்புகள் நிறைந்தவனாகவும் காணப்பட்டான். என்ன நடந்ததோ தெரியவில்லை. தீய நண்பர்களின் தொடர்பு அவனுக்கு ஏற்பட்டது. அவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றத் தொடங்கினான். பாடசாலைக்கும் ஒழுங்காகப் போவதில்லை. பொய் பேசுவது, சிறு சிறு திருட்டுகளை வீட்டில் செய்வது போன்ற தீய பழக்கங்கள் அவனிடம் ஏற்பட்டன. தன் ஒரே மகன் இப்படிப் போய்விட்டானே என்று வருந்தினார் தந்தை. அவனுக்கு எவ்வளவோ அறிவுரைகளைச் சொன்னார். ஆனால், அவனோ தீய நண்பர்களின் தொடர்பை விடவில்லை.



ஒருநாள் மகனை அழைத்த அவர், ''மகனே, அந்தக் கூடையில் பன்னிரெண்டு ஆப்பிள்கள் உள்ளன. அதில் ஒன்றே ஒன்று மட்டும் அழுகி உள்ளது. அந்தப் பழத்தை தூக்கி எறிய வேண்டாம். எல்லாப் பழங்களுடன் அதனையும் சேர்த்துப் பாதுகாப்பாக வை'' என்றார். அவனும் அப்படியே செய்தான்.

ஓரிரு நாட்கள் சென்றன. மகனை அழைத்த அவர் ''உண்பதற்கு ஒரு நல்ல ஆப்பிள் பழம் கொண்டு வா'' என்றார். அறைக்குள் சென்ற அவர் மகன் கூடைக்குள் இருந்த பழங்களைப் பார்த்தான். எல்லாப் பழங்களுமே அழுகியிருந்தன. தந்தையிடம் வந்த அவன், ''அப்பா, நீங்கள் பழங்களை என்னிடம் தந்தபோது அதில் ஒரு பழம்தான் அழுகி இருந்தது. ஆனால், இப்பொழுது எல்லாப் பழங்களும் அழுகிப்போய் உள்ளன'' என்றான்.

''மகனே! அழுகிப்போன பழத்தோடு சேர்ந்து நல்ல பழங்களும் அழுகிவிட்டன. அதேபோன்றுதான் தீயவரோடு சேரும் நல்லவரும் கெட்டு விடுவார்கள். நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?'' என்று கேட்டார்.

''தந்தையே, உங்களால் இன்று நான் நல்லறிவு பெற்றேன். தீய நண்பர்களின் தொடர்பை இன்றுடன் விட்டுவிடுகிறேன். நான் பெற்ற நல்லவன் என்ற பெயரை மீண்டும் பெறுவேன். இது உறுதி'' என்றான். தன் மகன் திருந்தியதை அறிந்த தந்தை மகிழ்ச்சி அடைந்தார்.

# பாட்டியின் சமயோசிதம்



ஓர் ஊரில் பாட்டி ஒருவர் தனியாக வசித்து வந்தார். ஒருநாள் அந்தப் பாட்டி கடைவீதிக்குச் சென்று திரும்பியபோது, அவர் வீட்டுக் கதவு திறந்திருந்தது. உள்ளே சென்று பார்த்த அவருக்கு தன் வீட்டுக்குள் திருடன் ஒருவன் திரைச்சீலைக்குப் பின்னால் மறைந்திருப்பது தெரிந்தது. அவனை தப்ப விடாமல் புத்திசாலித்தனமாகப் பிடிக்க வேண்டும் என்று பாட்டி நினைத்தார். இதனால், அங்கிருந்த விளக்கின் முன் நின்று கொண்டு, ''மாய விளக்கே, என்மீது கோபமா? நான் வெளியே போய் வந்ததும் என்ன நடந்தது? என்று கேட்பாயே இன்று ஏன் கேட்கவில்லை?'' என்றாள். இதைக் கேட்டதும் மறைந்திருந்த திருடனுக்கு ஆச்சரியம். 'என்ன இது பேசும் விளக்கா...?' என்று நினைத்தபடியே எட்டிப் பார்த்தான்.

விளக்கு திரைச்சீலையின் அசைவில் லேசாக ஆட பாட்டி, ''சரி கோபமில்லையா? அப்படியானால் என்ன நடந்தது என்று நான் சொல்கிறேன் கேள். பக்கத்து வீட்டுச் செல்வி இன்று பாடசாலைக்கு போகும்போது ஒரு நாய் அவளைத் துரத்தியது. அவள் சத்தம் போட்டுக் கத்தினாள்'' மீண்டும் விளக்கு காற்றில் அசைய, ''ஓ, எப்படிக் கத்தினாள் என்று கேட்கிறாயா?'' என பாட்டி விளக்குடன் கதைத்தபடியே இருந்தாள்.

திருடனுக்கோ ஒன்றும் புரியவில்லை. அவன், 'நமக்கு மட்டும் ஒன்றும் கேட்கவில்லை. விளக்கு ஆடுவது மட்டும் தெரிகிறது. ஆனால், இந்தக் கிழவி பேசுகிறாளே...' என்று குழம்பினான். ''மாய விளக்கே செல்வி எப்படிக் கத்தினாள் தெரியுமா? இதோ, கத்துகிறேன் பார். ''ஐயோ! உதவி, உதவி என்னைக் காப்பாற்றுங்கள்...'' என்று உரக்கக் கத்தினார் பாட்டி. அயலவர்கள் பாட்டிக்கு ஏதோ ஆபத்து என்று அங்கு ஓடி வந்தனர். பாட்டியும் புன்னகையுடன் வீட்டில் மறைந்திருந்த திருடனைக் காட்ட அயலவர்களும் அவனைப் பிடித்துக் காவலர்களிடம் ஒப்படைத்தனர்.

# ஒட்டகக்குட்டியின் கேள்வி



ஒருநாள் ஒட்டகக்குட்டி ஒன்று தனது தந்தை ஒட்டகத்துடன் வைக்கோலைத் தின்றுகொண்டிருந்தது. அப்போது அது, ''தந்தையே, உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?'' என்றது. தந்தை ஒட்டகமும், ''சரி கேள்'' என்றது.

''தந்தையே, ஏன் எங்கள் முதுகில் இந்த திமில் (முதுகில் உள்ள உயர்ந்த பகுதி) இருக்கிறது?'' என்று கேட்டது. தந்தை ஒட்டகமும் நாம் நீர் இல்லாத பாலைவனத்தினூடாக பல மைல்கள் பிரயாணம் செய்ய நேரிடும்போது, நீரை சேமித்து வைப்பதற்காக இந்த திமில் உள்ளது'' என்றது.

குட்டியும் திருப்தியடைந்தது. சிறிது நேரத்தில் அது மீண்டும் ''தந்தையே, நான் இன்னுமொரு கேள்வி கேட்கலாமா'' என்றது. ''இன்னும் ஒன்றா சரி கேள்'' என தந்தை ஒட்டகம் கூறியது. குட்டி ஒட்டகமும் ''தந்தையே, ஏன் எங்கள் கண் இமையில் நீண்ட ரோமம் உள்ளது?'' என்றது. அதற்கு தந்தை, ''நாம் பாலைவனத்தில் நடக்கும்போது மணற்புயல் ஏற்படின், கண்ணுக்குள் மணல் போகாதபடி அவை கண்களைப் பாதுகாக்கின்றன'' என்றது.

குட்டியும் திருப்தியடைந்தது. சிறிது நேரத்தின் பின்னர் அது, ''தந்தையே? ஏன் எமது கால்கள் இவ்வளவு அகன்று பலமாக குளம்புகளுடன் இருக்கின்றன'' எனக் கேட்டது. தந்தையும் ''நாம் பாலைவனத்தில் மணலில் நடக்கும்போது கால்கள் புதையாமல் இலகுவாக நடக்க அவை உதவுகின்றன'' என்றது.

தந்தை கூறுவதைக் கேட்ட குட்டி ஒட்டகம்,

## அமைதியின் சொற்கள்

''தந்தையே அப்படியானால் நாம் இந்த மிருகக் காட்சிசாலையில் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?'' என்று கேட்டது. வாயடைத்துப் போனது தந்தை ஒட்டகம்.

இவ்வாறுதான் நாமும் சிலவேளைகளில் எமது சுயமான சூழலில் இல்லாமல் தேவையற்ற சூழலில் தேவை இல்லாதவற்றை செய்துகொண்டிருக் கிறோம்.

பிரேம் ராவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்நிய ஆதிக்கத்திலிருந்து

# இலங்கை சுதந்திரம் பெற்ற வரலாறு



சுமார் 443 ஆண்டுகள் அந்நியரின் ஆதிக்கத்தின் கீழிருந்த இலங்கை, 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆங்கில அரசிடமிருந்து சுதந்திரம் பெற்றது. அந்தவகையில், 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையர்களாகிய நாம், இலங்கையின் 67 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

### ஐரோப்பியர்களின் வருகை

கி.பி. 1505 இல் இந்தியா நோக்கி வந்த போர்த்துக்கேய கப்பலொன்று புயலில் சிக்கி, இலங்கையின் காலி துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலிலிருந்த போர்த்துக்கேயர்கள் கோட்டைக்கு வந்து, கோட்டை ராச்சிய மன்னனைச் சந்தித்தனர். அதன்பின் படிப்படியாக இலங்கை அரசியலில் தலையிட்ட அவர்கள், ஈற்றில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்தையும் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தனர். சுமார் 150 வருடங்கள் போர்த்துக்கேயரால் ஆளப்பட்ட கரையோரப் பிரதேசங்களை, 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர்கள் கைப்பற்றி தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தனர். 1796 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிய ஆங்கிலேயர்கள், அதன்பின் படிப்படியாக முழு இலங்கையையும் தமது ஆட்சியின்கீழ் கொண்டு வந்தனர்.




இலங்கையின் முதலாவது சுதந்திர தின வைபவத்தின் போது...

### மக்கள் கிளர்ச்சி

அந்நியரின் ஆதிக்கத்தால் அக்கால இலங்கைவாழ் மக்கள் பல்வேறு பாதிப்புகளுக்குள்ளாகினர். இதனால், ஆங்கிலேய அரசுக்கு எதிராக காலத்திற்கு காலம் மக்கள் பல்வேறு கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். 1818 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கண்டிக்கலகம், 1848 ஆம் ஆண்டில் விவசாயிகளின் கிளர்ச்சி, 1878 இல் ஊவா-வெல்லஸ்ஸ கலகம் என்பன அவற்றில் முக்கியமானவை.



இவ்வாறு மோதல்கள், கிளர்ச்சிகள் அடிக்கடி ஏற்பட்டபோதும், ஆங்கிலேயர்கள் கொடுமையான முறையில் அப்பாவி மக்களை நசுக்கி-அடக்கி தமது ஏகாதிபத்திய ஆட்சியை தொடர்ந்து நடத்தி வந்தனர். இதனால், மக்களின் வெறுப்புகளை அதிகம் சம்பாதித்ததோடு, ஆங்கில அரசுக்கு எதிராக தேசிய சக்திகள் பல எழுச்சி பெறவும் தொடங்கின.



இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தலைவர்களும் புத்திஜீவிகளும்

### படித்தோர் குழாம்

1850 இற்கு பின்னர் அதாவது, 19 ஆம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில், படித்த இலங்கையர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இவர்கள் நாட்டில் நிகழும் அநீதிகளுக்கெதிராக குரல் எழுப்பியதோடு, பல்வேறு போராட்டங்களையும் நடத்தினர். இவர்களின் போராட்டம் காரணமாக 1910 ஆம் ஆண்டு மெக்கலம் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு, படித்த- சொத்துரிமை உள்ள இலங்கையர்களுக்கு தேர்தல் மூலம் வாக்களித்து ஒருவரை தெரிவுசெய்யும் வாய்ப்பு முதன்முதலாக வழங்கப்பட்டது.

### மூவின மக்களின் பங்களிப்பு

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த தலைவர்களும் ஒன்றாக இணைந்தே செயற்பட்டனர். நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் சேர்.பொன். அருணாச்சலம், சேர்.பொன். இராமநாதன், ஆறுமுகநாவலர் போன்றவர்களின் பங்களிப்பு அளப்பரியது. அதேவேளை, அறிஞர் சித்திலெப்பை, டி.பி. ஜாயா போன்ற இஸ்லாமிய தலைவர்களும் சுதந்திரப் போராட்டத்தில் அளப்பரிய பங்களிப்பைச் செலுத்தினர்.

இவர்களை தவிர, சீர்திருத்தவாதிகள் பலரும் போராட்டங்களை நடத்தினர். அவர்களில் ஜேம்ஸ் பீரிஸ், டி.பி.ஜயதிலக, மார்க்ஸ் பெர்னாண்டோ, சி.ஏ. ஹெவா விதாரன, டி.ஆர். விஜயவர்தன, மீகெட்டுவத்தே குணாநந்த தேரர், ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர், அநகாரிக தர்மபால, பியதாச சிறிசேன, ஆனந்த குமாரசுவாமி, குமாரதுங்க முனிதாச, எப்.ஆர்.சேனாநாயக்க, டீ.எஸ்.சேனாநாயக்க, ஈ.டபிள்யூ. பெரேரா, டபிள்யூ. ஏ.டி.சில்வா, கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்தன, கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.


### சுதந்திர அரசியலமைப்பு

இவ்வாறு சகல இன மக்களினதும் தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாக, 1931 இல் டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. இறுதியாக பிரித்தானிய அரசு உள்நாட்டு நிர்வாகத்தில் இலங்கையர் தம்மைத் தாமே ஆளும் விதத்தில் 1947 இல் சோல்பரி அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தியதோடு, அதனை அடுத்து நடைபெற்ற தேர்தலில் டீ.எஸ்.சேனாநாயக்க அவர்கள் இலங்கையின் முதலாவது பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். இதன்பின்னர் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆங்கிலேயர்களால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.



-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிரின
# எவ்வாறு

பூமியில் வாழ்கின்ற ஒவ்வொரு உயிரினமும் வாழ்நாள் முழுவதும் தமது சக்தியினை விரயம் செய்தே வாழ்கின்றன. அதாவது, நடத்தல், சுவாசித்தல், உணவை ஜீரணமடையச் செய்தல் மற்றும் சிந்தனையின் போதான சக்தி விரயமடைதல் போன்றவையாகும். வெப்பமான குருதியைக் கொண்ட உயிரினங்களுக்கு உடலை வெப்பத்துடன் வைத்திருக்க அதிக சக்தி தேவைப்படுகின்றது.

இவ்வாறு இழக்கும் சக்தியினை மீளப் பெற்றுக்கொள்ள உணவு அவசியமாகின்றது. மரங்களில் இருக்கும் பழங்களை உணவாக்கிக்கொள்வதன்மூலம் உயிரினங்களின் இயற்கை செயற்பாடு தீவிர மடைகின்றது. ஆனால், குளிர் காலத்தின்போது உயிரினங்களுக்கு உணவினைத் தேடிக் கொள்வ தென்பது மிகவும் கடினமாகும். ஏனெனில், பகல்பொழுது குறையும் நிலையில் மரங்களின் இலை களில் பச்சை நிறம் மாற்றமடைந்து, அவை உதிரத் தொடங்குகின்றன. அத்துடன், விரைவில் குளிர் தன்மை ஏற்பட்டு நிலத்தில் பனிப் படர்கின்றது. மனிதர்கள் கதகதப்பான ஆடைகளை அணிந்து கொண்டு வெப்பமூட்டி சுற்றாடலை வெப்பப்படுத்துகின்றனர். ஆனால், விலங்குகள் குளிர் காலத் தினை எவ்வாறு கழிக்கின்றன என்பது பற்றியும் இக்காலத்தில் அவை தமது உயிரைப் பாதுகாக்க என்னென்ன வழிமுறைகளைக் கையாள்கின்றன என்பது பற்றியும் இங்கு பார்ப்போம்.

## இடப்பெயர்வு

குளிர்காலத்தின்போது, வெப்பவலய நாடுகளுக்கு இடம்பெயரும் உயிரினங்கள் வசந்த காலத்தின்போது தமது புதிய சந்ததிகளுடன் குளிர் நாடுகளுக்கு மீண்டும் திரும்பு கின்றன. இதுவே இடப்பெயர் வாகும்.

**பறவைகள்:** இலையுதிர்க் காலத்தில் பெரும்பாலான பறவைகள் வெப்பமான காலநிலை நிலவும் நாடுகளுக்கு இடம்பெயர்கின்றன. இந்த பயணம் ஆபத்தானது. இதனால், சில பறவைகள் கூட்டமாகப் பயணிக் கின்றன. கடல் வாத்துக்கள் ஆங்கில 'V' எழுத்து வடிவில் கூட்டாகப் பறக்கின்றன. பகல் பொழுதின் நீட்சி மற்றும் காலநிலை ஆகியவற்றின் அடிப்படையில் பறக்கும் காலத் தினை அவை தீர்மானிக்கின்றன. இடம்பெயரும் பறவைகளினால் நீண்ட தூரம் பறக்க முடியும். ஆர்க்டிக் டர்ன் பறவைகள் வெப்பகாலத்தில் வட துருவத்தின் அருகாமையில் முட்டையிடுகின்றன. குளிர்காலத்தில் அண்டார்டிக்கா நோக்கிப் பறக்கின்றன.

**இடம்பெயரும் ஏனைய உயிரினங்கள்:** வெளவால், கெரிபு, எல்க், திமிங்கிலங்கள்.

மீன்களும் உணவு தேடி இடம் பெயர்கின்றன. ஆழமான நீர் பரப்பில் வெப்பம் அதிகமாகக் காணப்படுவத னால், தெற்கு நோக்கி அல்லது நீரின் ஆழத்திற்கு இவை சென்றுவிடுகின்றன.



இடம்பெயரும் பறவை இனங்கள்

## பூச்சிகளும் வேறு விலங்குகளும்

மொனார்ச் வண்ணத்துப் பூச்சிகள் வெப்பகாலத்தில் கென்டா மற்றும் வட அமெரிக்காவிலிருந்து தெற்கு மெக்சிகோ நோக்கி இடம்பெயர் கின்றன. இடம்பெயரும் பூச்சி




இனங்கள் குறுகிய தூரம் வரை இடம்பெயர்கின்றன. கறை யான்கள், ஜப்பானிய வண்டு இனங்கள் மண்ணிற்குள் இடம்பெயர்கின்றன. தரைப் புழுக்கள் மண்ணின் ஆழ்பகு திக்கு செல்வதுடன், சில புழு இனங்கள் மண்ணின் மேற்பகு தியில் இருந்து 6 அடி ஆழம் வரை பயணிக்கின்றன.

## சூழலுக்கு ஏற்ப மாறுதல்

சில உயிரினங்கள் குளிர் காலத் திலும் உத்வேகத்துடன் செயற்படுகின்றன. இதற்காக அவை மாறுபடும் காலநிலைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளவும் வேண்டும். இதற்காக பெரும்பாலான உயிரி னங்களின் உடலிலும் நடத்தை களிலும் வேறுபாடுகள் நிகழ்கின் றன. சில உயிரினங்களின் சருமத் தில் புதிய அடர்த்தியான ரோமங் கள் உருவாகின்றன. வீசல் மற்றும் Snowshoes முயல்களின் புதிய உரோமம் வெண்மை நிறமாகக் காணப்படும். பனியில் தம்மை மறைத்துக்கொள்ளவும் பாதுகாப்பினைப் பெறவும் இவ்வாறான மாற்றம் அவற்றுக்கு உதவுகின்றது. குளிர் காலத்தில் உணவு தேடிக் கொள்வது கடினமான விடயமாதலால் அணில்கள், எலிகள் மற்றும் நீர் நாய்கள் குளிர் காலத்திற்கான உணவினை இலையுதிர் காலத்திலேயே சேகரித்து வைத்துக்கொள்கின்றன. முயல்கள் மற்றும் மான்கள் குளிர் காலத்தில் பாசிகள், மரங்களின் கிளைகள், இலைகளைத் தேடி உட்கொண்டு குளிர்காலப் பொழு தினைக் கழிக்கின்றன. ஏனைய உயிரினங்கள் அந்தந்த காலத்திற் கேற்றவாறான உணவைப் பெற்று உட்கொள்கின்றன.

குளிர் காலத்தில் மரங்களில் உள்ள பொந்துகளில் உயிரினங் கள் ஒதுங்கிக்கொள்கின்றன. அல்லது குகைகளில் தரையின்கீழ் அவை பாதுகாப்பாக பதுங்கி இருந்து குளிரினை சமாளித்துக் கொள்கின்றன. சில எலிகள் பனியில்பொந்துகளை அமைத்து கூட்டமாக இருக்கின்றன.

குளிர் காலத்தில் குளிர் நீரில் உற்சாக மாக இருக்கும் மீன்களும் உள்ளன. இவ்வாறே, அனைத்து உயிரினங்களும் தமக்கே உரிய வாழ்க்கைச் சக்கரத்திற்கு ஏற்ப குளிர் காலத்தினைக் கழிக்கின்றன.






காலத்திற்குக் காலம் நிறத்தினை மாற்றிக்கொள்ளும் உயிரினங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கள் குளிர் காலத்தை கழிக்கின்றன?





துருவப்பகுதிகளில் வசிக்கும் உயிரினங்கள்






## பனிக்கால உறக்கம்

சில உயிரினங்கள் குளிர் காலத்தின் பெரும் பகுதியினை உறக்கத்தில் கழிக்கின்றன. இது சிறப்பான ஆழ்ந்த உறக்கமாகும். இந்த உறக்கத்திற்கு தயாராகும் வகையில் உயிரினத்தின் உடல் வெப்பநிலை இதயத்துடிப்பு மற்றும் சுவாச வேகம் என்பன குறைவடைகின்றன. இதனால், உடலில் இருந்து மிகவும் குறைந்தளவு சக்தியே விரயமாகின்றது. குளிர் காலத்தில் உறங்கும் உயிரினங்கள் அதற்காக இலையுதிர் காலத்தில் இருந்தே தயாராகின்றன. இதற்கென அவை அதிகளவில் உணவை உட்கொண்டு உடலில் கொழுப்பினை சேமித்துக்கொள்கின்றன. இந்த கொழுப்பினையே அவை உறக்கத்தின்போது உடல் பலத்திற்கு பயன்படுத்திக்கொள்கின்றன. குளிர் காலத்தின் பின்னர் உட்கொள்ளவென சில உயிரினங்கள் பலவிதமான விதைகளை சேகரித்து வைத்துக்கொள்கின்றன. சிறியளவு உடல் அமைப்பினைக் கொண்ட விலங்குகள் பனி உறக்கத்தில் ஆழ்ந்துவிடும் வாய்ப்புகள் அதிகமாகும். ஏனெனில், அவற்றுக்கு இடம்பெயர அதிகளவு சக்தி தேவைப்படுகின்றது.

சிலவகை உயிரினங்கள் குகைப் பொந்துகளிலும் சிலவகை மீன் இனங்கள் சிறிய அளவு திரவங்களிலும் ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபடுகின்றன. பறவைகள் மற்றும் சில வௌவால்கள் நாளாந்தம் சிறிய அளவில் உறக்கம் கொள்கின்றன.

## உறக்கம் கொள்ளும் தங்கமீன்கள்

வீடுகளில் வளர்க்கும் தங்க மீன்கள் (Gold Fish) குளங்களில் வசிக்கும் காலகட்டத்தில் குளிர் காலத்தில் தனது இருப்புக்காக குளத்தின்



பனிப்படிவத்தின் கீழ் மிதக்கின்றன. இந்த காலப்பகுதியில் அவற்றின் உடற் செயற்பாடுகள் குறைந்த மட்டத்திலேயே காணப்படும்.

## உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் வேறு வழிமுறைகள்

மீன்கள், தவளைகள், பாம்புகள், ஆமைகள் போன்ற குளிர்மையான இரத்தத்தினைக் கொண்ட உயிரினங்களுக்கு குளிர் காலத்தில் தமது உடல் வெப்பநிலையை தக்க வைத்துக்கொள்ள வழிவகைகள் இல்லை. பாம்புகளும் ஊர்வனவும் வேறு பல உயிரினங்களும் பொந்துகளிலும் குகைகளிலும் குளிர் காலப் பாதுகாப்பினைப் பெறுகின்றன. குளிர் காலத்தில் செயற்பாடின்றி உறக்கத்துடன் கழிக்கின்றன.

நீர் பல உயிரினங்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றது. காலநிலையில் குளிர் தன்மை ஏற்படும்போது, ஏரிகளிலும் குளங்களிலும் வசிக்கும் உயிரினங்கள் நீரின் ஆழத்திற்கு சென்றுவிடுகின்றன. தவளைகள், ஆமைகள் என்பன ஆழ்பகுதியில் இருக்கும் மறைவிடங்களில் மறைந்துகொள்கின்றன. சில உயிரினங்கள் சேற்றிலும் மறைந்திருக்கின்றன. குளிர் நீர் வெப்பமான நீரைவிட அதிகளவில் ஒட்சிசனை சேர்த்து வைத்துக்கொள்கின்றது. அதனால், தவளைகள் மற்றும் ஆமைகளின் சருமம் ஒட்சிசனை உறிஞ்சிக்கொண்டு சுவாசிக்கின்றன.





பனிக்கால உறக்கத்தில் ஆழ்ந்த கரடி



பனிக்கால உறக்கத்தில் ஆழ்ந்துவிடும் ஒரே ஒரு பறவையினம் (*Phalaenoptilus nuttllii*)



Skunk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்


பெயர்: ..................................................

★ *சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.*

01. [756] இந்தப் பெட்டியினுள் உள்ள எண்ணில், இலக்கம் 5 ஆல் வகை குறிக்கும் பெறுமானம் யாது?

1. 500 2. 5 3. 50

02. ஆயிரமாம் இடத்தில் ஐந்தையும் நூறினிடத்தில் இரண்டையும் வகை குறிக்கும் எண் சட்டம் யாது?




03. பின்வரும் எண்கோலங்களில் அடுத்து வரும் எண்ணை அடையாளமிடுக (7, 17, ---, ---, 47)

1. 27, 37 2. 27, 30 3. 27, 40

04. [ ] X 9 = 72 இங்குள்ள கட்டத்தினுள் வர வேண்டிய எண் யாது?

1. 7 2. 8 3. 6

05. அரைவாசிக்கு நிறந்தீட்டப்பட்டுள்ள உருவின்கீழ் கோடிடுக.



06. 1000 இன் அரைவாசியின் கால் பங்கு எத்தனை?


1. 100 2. 125 3. 250

07. 1l கொள்ளளவுடைய போத்தலினுள் இருக்கும் திரவத்தின் கனவளவு 350ml எனின், போத்தலை நிரப்பத் தேவையான திரவத்தின் அளவு யாது?


1. 650ml 2. 650l 3. 750ml

★ *8 ஆம், 9ஆம் வினாக்களுக்கு பின்வரும் கோலங்களை அவதானித்து, அடுத்து வரும் உருவை காண்க.*

08.



09.



கடந்தவார விடைகள்... 20 ஆம் பக்கத்தில்

10.




இவ்வரைபின்படி, பூக்களின் எண்ணிக்கை 40 ஆகும். இதன்படி, சிவப்பு நிறப் பூக்களின் எண்ணிக்கை யாது?

1. 20 2. 30 3. 25





11. வியாபாரி ஒருவர் பொருளொன்றின் விலையை VOSL:MO எனும் ஆங்கில எழுத்துக்களில் குறிப்பிட்டிருந்தார். அதன்படி விலை யாது?

1. 5037:90 2. 4971:14 3. 2345:25

12. சதுரமுகியொன்றின் ஒரு விளிம்பின் நீளம் 6cm ஆகும். அதற்கமைய, அச்சதுரமுகியின் விளிம்புகளின் நீளம் யாது?

1. 48cm 2. 24cm 3. 72cm

13.  இவ்வுருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 5 3. 6

14. ஒரு பெரிய பாத்திரத்தில் 10000 ml குளிர்பானம் இருந்தது. அதிலிருந்து ஒரு போத்தலுக்கு 500ml கொள்ளக்கூடியவாறு எத்தனை போத்தல்களை நிரப்பலாம்?

1. 10 போத்தல்கள் 2. 15 போத்தல்கள் 3. 20 போத்தல்கள்

15. வேலி ஒன்றின் இரு தூண்களுக்கிடையிலான தூரம் 2m ஆகும். அங்கு 20 தூண்கள் நடப்பட்டிருப்பின், வேலியின் மொத்த நீளம் யாது?

1. 40m 2. 38m 3. 39m

16. பிற்பகல் 6:50 மணியை நியம நேரத்தில் தருக.


..............................................

17. பின்வரும் எண்கோலத்தை அவதானித்து, அடுத்து வர வேண்டிய எண்கோலத்தை எழுதுக.

1, 4, 9, 10, 25 ...., ...., ....

18. 2027 ஐ சொற்களில் எழுதுக.........................................................

19. V, X, XV, ......, ...... இங்கு அடுத்து வர வேண்டிய இரு எண்களை தருக.

★ 


அருகிலுள்ள உருவை அவதானித்து, கீழ்காணும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

20. உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

..............................

21. DEGH தொகுதியின் பரப்பளவு யாது? ..........................................

22. ACDF இன் சுற்றளவு யாது? ..........................................

23. 1kg பால்மா பெக்கட்டின் விலை ரூபா 600.00 எனின், 200g பால்மா பெக்கட்டின் விலை யாது? ..........................................

24. 1kg அரிசியின் விலை ரூபா 70.00 ஆயின், 2kg 200g அரிசியின் விலை யாது? ...........


25. i. $\frac{2}{3} + \frac{1}{6} =$ .............. ii. $\frac{2}{3} - \frac{1}{6} =$ ..............

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளை நிறுவனங்களும் அதன் பயன்பாடுகளும்!










சில பத்திரிகை நிறுவனங்கள் நாட்டின் ஏனைய பாகங்களில் தமது கிளைகளை நிறுவியிருப்பதுண்டு. இந்த கிளைகள் இரண்டு அல்லது மூன்று அம்சங்களைக் கொண்டிருப்பதுண்டு.

**ஒன்று:** விற்பனை கிளை
**இரண்டு:** விளம்பரக் கிளை
**மூன்று:** பத்திரிகை பிரசுரிக்கும் கிளை

**இவற்றுள் முதலாவது:** விற்பனை நிலையமானது, தூரப் பிரதேசங்களில் இயங்குவதன்மூலம் அப்பிராந்தியப் பகுதிகளில் பத்திரிகை விற்பனையை விரிவுபடுத்துவதற்கான தனிப்பட்ட பிரத்தியேக முயற்சிகளை எடுக்கக் கூடியதாக இருக்கும். அதிலும் அப்பிராந்தியப் பகுதிகளில் பரீட்சயம் உள்ளவர்களை அக்கிளைகளில் பணிக்கு அமர்த்துவதன்மூலம் அவர்களது அந்த பரீட்சயம் பத்திரிகையை எவ்வவ் இடங்களுக்கு எவ்வாறு வாசகர்களிடம் கொண்டு சேர்க்கலாம் என்பதற்கு பயன்மிக்க சேவையினை பெறக்கூடியதாக இருக்கும்.

அதுமட்டுமன்றி, வாசகர்கள் தாம் பத்திரிகையை பெறுவதில் சிரமங்கள் இருந்தால் தமக்கு அருகாமையிலுள்ள கிளை நிறுவனத்தில் இதனை தெரிவிக்கக்கூடியதாக இருக்கும்.

**இரண்டாவதாக:** விளம்பரக் கிளை அமைப்பதன் நோக்கமும் வாசகர்களின் சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் தான்; தற்போது தத்தமது ஊர்களிலேயே குறித்த பத்திரிகைகளின் கிளைகள் இருப்பதனால், அங்கு சென்று தமது விளம்பரங்களை அவர்கள் ஒப்படைக்கமுடிகின்றது. இதனால், பண விரயம், நேர விரயம், அலைச்சல் அனைத்தும் தவிர்க்கப்படுகின்றன.

**மூன்றாவதாக:** பத்திரிகை பிரசுரிக்கும் கிளையை எடுத்துக்கொண்டால் எல்லாப் பத்திரிகைகளுமே இந்த வழிமுறையை பின்பற்றும் என்றில்லை. வசதி பொருந்திய பத்திரிகை நிறுவனங்களே இதனைக் கைக்கொள்வதுண்டு. அதாவது, இதன்மூலம் பிரத்தியேகமான மற்றுமொரு பத்திரிகை அச்சு இயந்திரமொன்றை வெளிப்பிராந்தியப் பகுதி கிளையில் பொருத்தி, அப்பிராந்திய செய்திகளுககு முக்கியத்துவம் அளித்து அதிகப்படியாக அப்பிராந்திய செய்திகளை இடம்பெறச் செய்து பிரசுரிக்கப்படும். இருப்பினும், தலைமை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலேயே இக்கிளை நிர்வகிக்கப்படும். இவ்வாறு பிராந்தியத்தில் இப்பத்திரிகை பிரசுரிக்கப்படுகின்றபோதிலும் ஏனைய சில பக்கங்கள் தலைமையக ஆசிரிய பீடத்தில் அமைக்கப்பட்டு அவை இணையத்தின் வழியே பிராந்தியக் கிளைக்கு அனுப்பப்படுவதுண்டு.

## பயன்கள்

பிராந்தியக் கிளையில் அச்சு இயந்திரத்தை வைத்து பத்திரிகையை அச்சடிப்பதனால் குறித்த பத்திரிகை நிறுவனம் பல சௌகரியங்களை அடையக்கூடியதாக இருக்கும். இதில் முக்கியமானது என்னவென்றால், பத்திரிகையை நீண்ட தூரத்திற்கு கொழும்பு போன்ற இடங்களிலிருந்து பயண சிரமங்களுடன் கொண்டு போகவேண்டிய தேவை இருக்காது. இதனால், செலவும் நேரமும் மீதமடைவதால் பிராந்தியப் பகுதிகளில் நடைபெற்ற செய்திகளை கடைசித் தறுவாயில்கூட உடனே பிரசுரித்து பிராந்தியப் பகுதி வாசகர்களுக்கு அறியச்செய்வதற்கு இது வசதியாக இருக்கும். உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் இரவு பதினொரு மணியளவில் முக்கிய சம்பவமொன்று நடைபெற்றுள்ளதென வைத்துக்கொள்வோம். இச்செய்தியை கொழும்பிலிருந்து பிரசுரமாகும் பத்திரிகை நிறுவனம் யாழ்ப்பாணத்திற்கு மறுநாள் அனுப்பப்படவுள்ள பத்திரிகையில் இச்செய்தியை பிரசுரிப்பதற்கு போதிய நேரமிருக்காது. ஆனால் குறித்த இரவு 11 மணிக்கு நடைபெற்ற செய்தியை பிராந்திய நிலையிலுள்ள ஆசிரிய பீடத்தினர் உடனேயே செய்தியாக்கி நள்ளிரவில் அதனை அச்சேற்றி விடியற்காலையிலேயே தமது பிரதேசங்களில் விநியோகித்துவிடக்கூடியதாக இருக்கும். இதனால், வாசகர்களுக்கு தமது ஊர் சம்பந்தப்பட்ட செய்தியானது, உடனடியாக வெளிவந்த திருப்தியை ஏற்படுத்தும். (தொடரும்)

-ரிஷபன்

இரட்டிப்பு பரிசு...

விஜய் — TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*21.01.2015* TOP News கேள்விக்கான விடை:
அமெரிக்க வெஸ்புசி

Pen Drive வெற்றியாளர்:
எம்.சி.எம்.றியாஸ்,
127/4, தங்காவில்,
பொலன்னறுவை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(04.02.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
04.02.2015

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல:..............................
பாடசாலை:..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்




# நான்காம் ஜோர்ஜ் மன்னர் நியமித்த ஆணைக்குழு

நான்காம் ஜோர்ஜ் மன்னர் ஆணைக்குழுவொன்றை நியமித்தார். அதன்படி, மேஜர் டபிள்யு எச்.சீ.கோல்புறூக் கி.பி 1829 ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வந்தார். அவர் இலங்கையின் சட்டங்கள் மற்றும் சிவில் நிர்வாகம் குறித்து அனைத்து விடயங்களையும் விசாரித்து அறிந்துகொண்டார். அதன்பின், சார்ள்ஸ் கெமரூன் எனும் ஆணையாளர் நீதிமன்றம் குறித்து விசாரிப்பதற்காக நியமனம் பெற்று இலங்கை வந்தார். அவர் வருவதற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. இலங்கை அரசின் நிதி நிலைமையை ஆராய்வதும் அவரின் நோக்கங்களில் ஒன்று. வருடத்திற்கு வருடம் வரவைவிட அதிக செலவு ஏற்பட்டது. அத்தோடு கெமரூனின் வருகைக்கு இந்நாட்டில் இருந்த ஆங்கிலேயரும் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டமும் ஒரு காரணமாகும்.

இலங்கையில் நடைமுறையிலிருந்த ஆங்கில அரசு ஏதேச்சதிகாரமான கொடுங்கோலான கேடு விளைவிக்கும் வகையில் மக்களை தொல்லைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. நீதியை நிலைநாட்டுவதில் பாரபட்சமும் சில வர்த்தகங்கள் சம்பந்தமாக அரசு அனுபவித்த ஏகபோக உரிமையும் வர்த்தகம் வீழ்ச்சி அடையக் காரணமாக அமைந்தது. இலங்கை மக்கள் அகதிகள் போன்று ஆனார்கள். மக்களிடம் பலவந்தமாக வேலை வாங்கியமையால் அவர்கள் வெறுப்படைந்தனர். இவற்றையும் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலேயர்கள் ஆங்கில அரசிற்கு முன்வைத்தனர். ஆணைக்குழுக்கள் மூலமாக இவை அனைத்தும் விசாரணைக்கு எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதுகுறித்து ஆங்கிலம் தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் நாடு முழுவதும் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எறும்புகள் பற்றிய சுவாரஸ்யங்கள்

பூச்சி இனத்தைச் சார்ந்த ஓர் உயிரினம்தான் இந்த எறும்புகள். 22,000 எறும்பு இனங்கள் பூமியில் வாழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எறும்பு இனங்களில் கறுப்பு எறும்பு, கடி எறும்பு, சிவப்பு எறும்பு, கட்டெறும்பு என்பன நாம் நன்கறிந்த எறும்பு இனங்களாகும்.

எறும்புகள், குடியிருப்புத் தொகுதிகளாகவே வசிக்கின்றன. ஒரு குடியிருப்புத் தொகுதியில் ஒரு மில்லியன் அளவிலான எறும்புகள் வசிப்பதோடு, அங்கு பலவகைப் பிரிவுகளும் அறைகளும் காணப்படுகின்றன. அவ்வாறே, ஒரு குடியிருப்புத் தொகுதியில் ராணி எறும்புகள், சாதாரண எறும்புகள், பணியாளர் எறும்புகள், படைவீரர் எறும்புகள் என்பன வசிக்கின்றன.

குடியிருப்பில் வசிக்கும் ஆண் எறும்புகள் ராணி எறும்புகளுடன் இணைந்து இனப்பெருக்கம் செய்கின்றன. வேலைக்கார எறும்புகள் முட்டைகளை பாதுகாத்தல், சிறு எறும்புகளை பாதுகாப்பாக வளர்த்தல், குடியிருப்புத் தொகுதிகளை கட்டியெழுப்புதல், சுத்தம் செய்தல், உணவு சேகரித்தல் போன்ற பணிகளைச் செய்கின்றன. வேலைக்கார எறும்புகளை விட, அளவில் பெரியவையான படைவீரர் எறும்புகளின் பணி குடியிருப்பைப் பாதுகாப்பதாகும்.




## உடல் அமைப்பு

எறும்புகளின் உடல் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டது. அவையாவன: தலைப்பகுதி, மார்புப்பகுதி மற்றும் வயிற்றுப் பகுதி என்பனவாகும்.

✱ **தலைப்பகுதி:** எறும்புகளின் தலைப்பகுதியிலுள்ள விசேட உறுப்பாக உணர்கொம்புகளைக் குறிப்பிடலாம். இதனூடாக பாதுகாப்பு, உணவு மற்றும் சூழல் இயல்பு நிலை என்பன உணரப்படுகின்றன. முகத்திற்கு முகம் நேரே சந்திக்கும் எறும்புகள், இந்த உணர்கொம்புகளின்மூலமே தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றன.



✱ **மார்புப்பகுதி:** எறும்பொன்றின் உடலின் நடுப்பகுதியே அதன் மார்புப்பகுதியாகும். தலைப்பகுதிக்கு அடுத்ததாகவும் வயிற்றுப்பகுதிக்கு முன்பாகவும் மார்புப்பகுதி காணப்படும். எறும்பொன்றின் ஆறு கால்களும் இந்த மார்புப்பகுதியுடனேயே தொடர்புபட்டுள்ளன.

✱ **வயிற்றுப்பகுதி:** வயிற்றுப்பகுதியிலேயே சமிபாட்டுத் தொகுதி மற்றும் இனப்பெருக்கத் தொகுதி என்பன அமைந்துள்ளன.

## எறும்புகள் எவ்வாறு சுவாசிக்கின்றன?

எறும்புகள், பலம் கொண்ட வெளிப்புற என்புக்கூட்டுத் தொகுதியைக் கொண்டுள்ளன. இந்த கூடு போன்ற அமைப்பில் காணப்படுகின்ற சிறிய மூச்சுத்துளைகளின் மூலமாகவே எறும்புகள் சுவாசிக்கின்றன.

**-இஷ்ரத் இம்தியாஸ்**

# 2014, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** எம்.பாதில்.
**புள்ளிகள்:** 182.
**பாடசாலை:** அந்-நூர் மத்திய கல்லூரி, பாணகமுவ.
**பெற்றோர்:** எம்.முஸ்தபா-எஸ்.பர்மிலா.



**பெயர்:** எஸ்.ராசிதா.
**புள்ளிகள்:** 168.
**பாடசாலை:** மாறை/அல்-மினா ம.வி. மீயல்லை.
**பெற்றோர்:** எம்.ரிஸ்மி-எஸ்.நுஸ்ரா.



**பெயர்:** மஹ்தி முஸம்மில்.
**புள்ளிகள்:** 164.
**பாடசாலை:** தெல்தெனிய முஸ்லிம் வித்., பலகொல்ல.



**பெயர்:** எஃப்.ஸைனப்.
**புள்ளிகள்:** 163.
**பாடசாலை:** கே/மாவ/பதுரியா மத்திய கல்லூரி.
**பெற்றோர்:** எம்.ரிஸ்மி-எஃப்.றிப்கா.



**பெயர்:** அப்துல்லாஹ் பஹ்மான்.
**புள்ளிகள்:** 173.
**பாடசாலை:** சாஹிரா ஆண்கள் கல்., கட்டுகஸ்தொட்டை.



**பெயர்:** ஆகிஃப் அஹ்மத்.
**புள்ளிகள்:** 166.
**பாடசாலை:** கா/அல்-அக்ஸா ஆரம்பப் பாட., காலி.
**பெற்றோர்:** எம்.பஹீம்-எஃப்.பஸீனா.



**பெயர்:** எம்.அஹ்மத்.
**புள்ளிகள்:** 158.
**பாடசாலை:** கா/அல்-அக்ஸா ஆரம்பப் பாட., காலி.
**பெற்றோர்:** இஸட்.தனீரா-எம்.பிஸ்தாமி.

## அந்-நூர் முஸ்லிம் ம.வித்., வறக்காமுற



**பெயர்:** உஸ்மான் அஹமட்.
**புள்ளிகள்:** 167.



**பெயர்:** நூருல் ஹுதா.
**புள்ளிகள்:** 164.



**பெயர்:** எம்.ஆர்.ஹுஸ்னி.
**புள்ளிகள்:** 161.



**பெயர்:** எஃப்.நுஸ்லா.
**புள்ளிகள்:** 159.



காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலை மாணவிகளான சிப்னா சைனத் (இடது) 167 புள்ளிகளையும், சிப்கா சைனத் (வலது) 163 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இவர்கள் ஏ.சமட்-சீறுபா சமட் ஆகியோரின் புதல்விகளாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிற்றுத்தொகுதியின் உயரமான மலைகள்

கோள்கள் மற்றும் அவற்றின் உபகோள்களை மேலோட்டமாக பார்க்கையில் அவை சமதரைகளைக் கொண்டவை போல் காட்சியளித்தாலும், உண்மை நிலை அவ்வாறில்லை. மாறாக, அவற்றிலும் மலைகளும் மலைத்தொடர்களும் உள்ளன. அதேபோல் பாரிய பள்ளங்களும் காணப்படுகின்றன. அதன்படி, ஞாயிற்றுத்தொகுதிக்குட்பட்ட கோள்களில் காணப்படுகின்ற உயரத்தில் கூடிய 10 மலைகள் பெயரிடப்பட்டுள்ளன.




### நூசோலே மொன்டெஸ்- வியாழன்

வியாழனின் மூன்றாவது பெரிய உபகோளாகக் கருதப்படும் 'IO' வில் இந்த மலை அமைந்துள்ளது. இந்த உபகோளின் உட்பகுதியில் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக, இம்மலை உருவானதாக கருதப்படுகின்றது.




### மொன்ஸ் ஹியூஜென்ஸ் - சந்திரன்

புவியின் உபகோளான சந்திரனில் உள்ள மிகவும் உயரமான மலையாக மொன்ஸ் ஹியூஜென்ஸ் மலை கருதப்படுகின்றது. நெதர்லாந்து விண்வெளி வீரரான கிறிஸ்டியன் ஹியூஜென்ஸ்ஸின் ஞாபகார்த்தமாக அவரின் பெயரால் இம்மலை அழைக்கப்படுகின்றது.




### ரீசில்வியா சிகரம்- வெஸ்ட்டா விண்கல்

ஞாயிற்றுத்தொகுதியின் இரண்டாவது உயரமான மலை இந்த வெஸ்ட்டா விண்கல்லில்தான் அமைந்துள்ளது. பில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன் நிகழ்ந்த ஒரு செயற்பாட்டின் விளைவாக இம்மலை உருவானதாக கருதப்படுகின்றது.








### மத்திய மலைத்தொடர்- சனி

சனிக்கோளின் மூன்றாவது மிகப்பெரிய உபகோளான ஐயபெடஸ்ஸின் மத்திய பகுதியைச் சுற்றி இந்த மலைத்தொடர் காணப்படுகின்றது.

### ஹர்ச்செல் மத்திய மலை- சனி

சனிக்கோளின் மைமஸ் உபகோளின் மிகப்பெரிய பள்ளத்தின் மத்தியில் இந்த மலை அமைந்துள்ளது.



### மவுனா கியா - புவி

இம்மலையின் பெரும்பகுதி நீருக்கடியில் இருப்பதால், எவரெஸ்ட் சிகரத்தைவிட இது உயரத்தைக் கொண்டதாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. ஹவாய் தீவில் அமைந்துள்ள இம்மலையானது, தூங்கு எரிமலையாக கருதப்படுகின்றது. நாஸா நிறுவனத்தின் பல தொலைநோக்கிகள் இங்கு நிலை கொண்டுள்ளன.





உயர் தொழில்நுட்பங்கள் கொண்ட தொலைநோக்கிகளினால் இம்மலையை தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.




### டூம் மொன்ஸ் - சனி

சனிக்கோளின் டைட்டன் உபகோளில் அமைந்துள்ள இந்த மலை மிகவும் அற்புதமான படைப்பாக கருதப்படுகின்றது. டைட்டனின் மிகப் பெரிய பள்ளத்தில் பனிக்கட்டி எரிமலை வெடிப்பு ஏற்பட்டதன் மூலமே இந்த மலை உருவாகியதாக கருதப்படுகின்றது.




### ஒலிம்பஸ் மொன்ஸ்- செவ்வாய்

ஞாயிற்றுத்தொகுதியின் மிக உயரமான மலையாகிய இது; இன்னும் செயல்படாது அமைதிகாக்கும் ஓர் எரிமலையாகும். இதில் ஒரு பகுதி இற்றைக்கு பல பில்லியன் வருடங்களுக்கு முன் உருவானதோடு, மற்றொரு பகுதி இற்றைக்கு பல மில்லியன் வருடங்களுக்கு முன் உருவானதாக நம்பப்படுகின்றது.





### கெலோரிஸ் மொன்டெஸ் - புதன்

புதன் கோளில் அமைந்துள்ள கெலோரிஸ் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட கடும் அழுத்தம் காரணமாக இந்த மலை தோன்றியுள்ளதாக கருதப்படுகின்றது.

### மாட் மொன்ஸ் - வெள்ளி

மாட் மொன்ஸ் மலைச்சரிவில் லாவா பெருக்கெடுத்து ஓடியதற்கான அடையாளங்கள் நூற்றுக் கணக்கான கிலோ மீற்றர் தூரத்திற்கு காணப்படுகின்றன. சாதாரண திறந்த எரிமலை வழியாக வெளியேறிய லாவா மூலம் இந்த மலைத்தொடர் உருவாகியதாக கருதப்படுகின்றது.



-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக்களில் ஈடுபடுவது ஆரோக்கிய வாழ்வுக்கு வழியமைக்கும்...

விளையாட்டுக்களில் ஈடுபடுவது ஆரோக்கிய வாழ்விற்கு அத்தியாவசியமானதாகும். ஒருவர் ஆரோக்கியமான மனிதனாக உருவெடுப்பதற்கு அவரது பிள்ளைப் பருவத்திலிருந்தே அத்திவாரமிடப்படுகிறது. பிள்ளைப் பருவத்தில் கிடைக்கும் போஷாக்கான உணவு, உளவியல் ரீதியான ஆரோக்கியம், சுறுசுறுப்பான செயற்பாடு, நல்லொழுக்கம் என்பன அதில் தாக்கம் செலுத்துகின்றன. விளையாடுவதால் கிடைக்கும் நன்மைகளோ ஏராளம். எனவே, ஆரோக்கியம் தரும் விளையாட்டுக்களுக்கென்று ஒவ்வொரு நாளும் சில மணித்தியாலங்களை ஒதுக்கிக்கொள்வது சிறந்தது.



## நோயற்ற வாழ்வு

எமது உடலானது, எலும்புகளாலும் தசைகளாலும் நரம்புக்களாலும் ஆக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் உரிய முறையில் செயல்பட்டால்தான் ஆரோக்கியமான வாழ்க்கையை நாம் வாழலாம். எமது தசைகளும் எலும்புகளும் நரம்புகளும் சரிவர செயற்படுத்தப்படாமல், பயிற்சிகள் அளிக்கப்படாமல் இருந்தால் எமது மூட்டுக்கள் பாதிக்கப்படலாம். உடல் எடை அதிகரித்து வழமையான செயல்பாடுகளில் கூட ஈடுபட முடியாமல் போய்விடலாம். எனவே, இந்த பாதிப்புகளை எதிர்கொள்ளாமல் இருக்கவே விளையாட்டுக்கள் எமக்கு உதவுகின்றன. விளையாட்டுக்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வை அளிக்கின்றன; சோம்பலை அகற்றுகின்றன. அத்துடன், விளையாடும் பொழுது உடல்-உள வளர்ச்சி ஏற்படுகின்றது. இதுவே ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழியமைக்கின்றது.



## பொருத்தமான விளையாட்டுகளைத் தெரிவுசெய்தல்

16-18 வயதாகும் வரை எமக்குப் பொருத்தமான விளையாட்டொன்றை தெரிவுசெய்வது சிரமமானதாகும். 6 அல்லது 7 வயதுடைய பிள்ளையொன்று பிற்காலத்தில் எந்த விளையாட்டில் திறமையாகப் பிரகாசிக்கும் என்பதை நிர்ணயிப்பது கடினம். அவ்வாறே, சிறுவயதில் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் நல்லதல்ல. 12 வயது முதல் 18 வயது வரையிலான காலகட்டம் விரைவான உடல் வளர்ச்சிக்குரிய காலமாகும். அதிலும் 16 வயதின் பின் உடல் வேகமாக வளர்ச்சியடையும்.

சிறுவயதில் அதிக கலோரி அளவினை விளையாட்டிற்காக செலவழிப்பது நல்லதன்று. அவ்வாறு செய்தால் உடல் வளர்ச்சிக்குப் போதியளவு கலோரி கிடைக்காமல் போய்விடும். எனவே, உரிய வயதை (16-18 வயதை) அடையும்போது பாடசாலை விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியரின் வழிகாட்டுதலின் கீழ் தமக்குப் பொருத்தமான விளையாட்டொன்றை மாணவர்கள் தெரிவுசெய்ய வேண்டும்.

## எப்போதெல்லாம் விளையாடலாம்?

12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளாயின், குறைந்த பட்சம் வாரத்திற்கு மூன்று நாட்கள் (திங்கள், புதன், வெள்ளி) விளையாட்டில் ஈடுபடுவது அவசியமாகும். 12 வயது முதல் 14 வயதிற்குட்பட்டவர்களாயின், வாரத்திற்கு நான்கு நாட்களாவது (திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி) விளையாட்டில் கட்டாயமாக ஈடுபட வேண்டும். பொதுவாக, இரவு உணவின் பின்னர் விடியும்வரை சுமார் 10 மணித்தியாலங்களுக்கு நாம் எதுவும் உட்கொள்ளாமல் இருப்பதால், விளையாட்டுப் பயிற்சிகளுக்காகச் செல்லும்பொழுது சிறிதளவு பாசிப்பயறு அல்லது கடலையை உங்கள் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## விளையாட்டுக்களில் ஈடுபடுவதனால் கிடைக்கும் பயன்கள்

விளையாட்டுக்களில் ஈடுபடுவதனால் எமக்குக் கிடைக்கும் பயன்களோ ஏராளம். அவற்றில் சில வருமாறு:

- நோயற்ற - ஆரோக்கியமான வாழ்க்கை.
- உடல்-உள வளர்ச்சி கிட்டும்.
- மன அழுத்தம் நீங்கும்.
- குழுவாக விளையாடும் விளையாட்டுக்களில் ஈடுபடும்போது, தலைமைத்துவப் பயிற்சி, ஒற்றுமை, சகோதரத்துவம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற பண்புகள் வளர்க்கப்படும்.
- வெற்றி-தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வளர்க்கப்படும்.
- உடலில் சீரான குருதியோட்டம் நிகழ வழிகிடைக்கும்.
- உடல் பருமனை சரிவர பேணக்கூடியதாக இருக்கும்.
- உற்சாகம் பிறக்கும்.

-(அ)

## ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி - 06 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | று | | 2 ம | த | கு |
| ற் | | 3 வா | ழை | | |
| று | | த் | | 4 வ | லை |
| 5 மு | த் | து | | ய | |
| க | | | 6 மு | ல் | லை |
| ம் | | 7 யா | னை | | 8 சா |

### போட்டி: 06 வெற்றியாளர்கள்

- மல்கியா திருக்குமரன், நாவற்குடா.
- டி.ராம்சரண், திருகோணமலை.
- எம்.அப்பாஸ், நாவலப்பிட்டி.
- ஜே.ஆர்.லெம்பர்ட், வங்காலை.
- அப்துல் முஃனி, காலி.
- எம்.வஸீம், ஏறாவூர்-03A.
- என்.துஸ்மிதா, கொழும்பு-06.
- ஷம்லா இக்பால், தும்புலுவாவ.
- எஸ்.பரத்வாஜ், கொழும்பு-13.
- அம்னா, வட்டதெனிய.

## உலக ஈரநில குறுக்கெழுத்துப் போட்டிகளின் இறுதிக் குலுக்கல் போட்டி வெற்றியாளர்கள்

வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பன இணைந்து, விஜய் மற்றும் விஜய பத்திரிகைகளின் ஊடக அனுசரணையில் நடாத்தப்பட்ட உலக ஈரநில குறுக்கெழுத்துப் போட்டிகளின் இறுதிக் குலுக்கல் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

**முதல் வெற்றியாளர்கள்:**

முதல் வெற்றியாளர்களாக மூவர் தெரிவாகியுள்ளதுடன், அவர்களுக்கு தமது குடும்ப அங்கத்தவர்களுடன் தேசிய சரணாலயத்தில் இரவு தங்கியிருப்பதற்கான வாய்ப்பும் பணப்பரிசுகளும் வழங்கப்படும்.

- ★ பீ.மலிந்து திவங்க மதுஷான் பெர்னாந்து, றோயல் கல்லூரி, பாணந்துறை.
- ★ அமிரு கெத்மிக பீரிஸ், நாளந்தா கல்லூரி, கொழும்பு.
- ★ எம்.எஸ்.எம்.சஹிட், குளி/முஸ்லிம் வித்தியாலயம், குருநாகல்.

**ஏனைய வெற்றியாளர்கள்:**

ஏனைய வெற்றியாளர்களாக 12 பேர் தெரிவாகியுள்ளதுடன், இவர்களுக்கு பணப்பரிசுகள் வழங்கப்படும்.

- ★ ஈ.எம்.எம்.சமித சந்தருவன், மைத்ரிபால சேனாநாயக்க தே.பாட., மதவாச்சி.
- ★ ஜே. ஜெயமதுரை, உதயகட்டு மகா வித்., புதுக்குடியிருப்பு.
- ★ எம்.பீ.சபானா, குழந்தை யேசு கன்னியர் மடம், இரத்தினபுரி.
- ★ எச்.எஷாதி விராஜினி, ஸ்ரீ ராகுல தே.பாட., தொடம்பே.
- ★ விஷ்மி சந்தலிகா, சென்.செபஸ்தியன் பா.ம.வித்., கந்தானை.
- ★ எம்.என்.ஏ.அஸ்ஹர், மணல்குன்று ம.ம.வித்., புத்தளம்.
- ★ பீ.ஹசித சந்தருவன் கருணாரத்ன, கிரிந்திவெல ம.ம.வித்., கிரிந்திவெல.
- ★ ஆர்.ஜீ.பிரவின் பிம்சர சமரநாயக்க, டட்லி சேனாநாயக்க ம.வித்., வறக்காபொளை.
- ★ எம்.ஆர்.எஃப்.ருஸைரி, சாஹிரா கல்லூரி, அக்குறனை.
- ★ கே.ஜயனி தில்ஹாரா, வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்., அநுராதபுரம்.
- ★ ஜீ.கே.இந்துசர கவிஷ்க, கெப்பட்டிபொல இடைநிலைப் பாடசாலை, அம்பாறை.
- ★ எம்.எம்.ஏ.உவிந்து சந்தசர, பாலட்டுவ குணரத்ன ம.ம.வித்தியாலயம், மாத்தறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெமத்களை வேட்டையாடிய க்ரவெட்டியன் மக்கள்




**செக் குடியரசின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ப்ராக் நகரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியொன்றின் போது, பண்டைய காலத்தில் வாழ்ந்த மனித இனம் குறித்து சில சான்றுகள் கிடைத்துள்ளன. 'க்ரவெட்டியன்' என அழைக்கப்படும் இந்த மக்கள், உலகிலிருந்து அழிந்துவிட்ட உயிரினமான மெமத்களை வேட்டையாடி உட்கொள்ளும் வழக்கத்தினைக் கொண்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.**



க்ரவெட்டியன் கால உணவுச் சங்கிலியொன்று

## ஆகாரமாக சுவையான இறைச்சி

சுமார் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்த மக்களின் சுவையான ஆகாரமாக மெமத்களின் இறைச்சி இருந்துள்ளதாக கருதப்படுகின்றது. நிலப்பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, க்ரவெட்டியன் மக்கள், மெமத் இறைச்சியினை சுவைபார்த்துள்ளதுடன், மெமத்களை வேட்டையாட தமக்கு உதவிய நாய்களுக்கு கலைமான்களின் இறைச்சியை உணவாக வழங்கியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், இவர்கள் தமது வாசஸ்தலங்களை நிர்மாணித்துக்கொள்ளவென மெமத்களின் எலும்புகளைப் பயன்படுத்தியுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மெமத்களின் தந்தங்களினால் உருவாக்கப்பட்டுள்ள கைவினைப் பொருட்களும் இப்பகுதியிலிருந்து ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.





க்ரவெட்டியன் வாசஸ்தலமொன்றின் உட்பகுதி



க்ரவெட்டியன் சிறுவனொருவன்

## மனிதர்களுடன் வேட்டைக்குச் சென்ற நாய்கள்

சுமார் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஐரோப்பாவில் வாழ்ந்த மக்களின் உணவுகளில் மெமத் இறைச்சிக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் மனிதர்கள் நாய்களை வளர்த்து வந்துள்ளனர் என்றும், அந்த நாய்களைப் பயன்படுத்தி அவர்கள் வேட்டைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், அன்றைய காலப் பகுதியில் காணப் பட்ட சிறிய ரக ஆயுதங்களையும் கருவிகளையும் பயன்படுத்தி, எவ்வாறு மெமத் போன்ற பாரிய விலங்குகளைக் கொல்ல முடிந்தது? என்ற கேள்விக்கு விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இதுவரை விடை காணவில்லை. எனினும், விரைவாக இரையைக் கண்டுபிடிக்கவும் இரைகளை சுற்றிவளைக்கவும் நாய்கள் அவர்களுக்கு உதவியிருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அத்துடன், வேட்டையாடப்பட்ட இரையை ஏனைய விலங்குகளிடம் இருந்து பாதுகாத்து வைத்திருக்கவும் இந்த நாய்கள் க்ரவெட்டியன் மக்களுக்கு உதவியிருக்கலாம் என அவர்கள் மேலும் கருதுகின்றனர்.

## க்ரவெட்டியன் மக்களின் கலாசாரம்

இற்றைக்கு சுமார் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஐரோப்பாவில் நிலவிய உயர் பெலியோலித்திக் காலப் பகுதியிலேயே இந்த க்ரவெட்டியன் கலாசாரம் நிலவியுள்ளது. இக்கலாசாரத்தில் கற்களினாலான ஆயுதங்களை வடிவமைக்கும் தொழிற்துறையும் நிலவியுள்ளது. அதற்கமைய; மாடுகள், குதிரைகள், கலைமான்கள் மற்றும் மெமத்கள் போன்ற காட்டு விலங்குகளை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்ட சிறிய-கூரான ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த க்ரவெட்டியன் கலாசாரத்தினை விஞ்ஞானிகள் பிராந்திய ரீதியில் இரண்டு பகுதிகளாகப் பிரித்துள்ளனர். மேற்கத்தேய க்ரவெட்டியன் கலாசாரமானது, பிரான்ஸின் கற்குகைகள் அமையப்பெற்றுள்ள இடங்களில் பரவியிருந்தது. மத்திய ஐரோப்பா மற்றும் ரஷ்யாவின் சமவெளிகளைச் சேர்ந்த மெமத் வேட்டைக்காரர்கள் கிழக்குக்ரவெட்டியன் கலாசாரத்திற்கு உரியவர்களாவர்.

-இ



க்ரவெட்டியன் மக்களின் வாசஸ்தலங்கள் இவ்வாறு இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்களின் இளவரசி ரோஜா


பல்கேரிய ரோஜாக்கள்


பறிக்கப்பட்ட ரோஜா மலர்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன

நறுமணம் மற்றும் கவர்ச்சியான வர்ணக்கலவைகள் கொண்ட அழகிய மலராக ரோஜா மலர்கள் திகழ்கின்றன. இது, பண்டைய காலம் தொட்டே அனைவராலும் விரும்பப்படுகின்ற மிகவும் பிரபல்யமான மலராகும். சில நாடுகளும் பிரதேசங்களும் ரோஜா வளர்ப்பு காரணமாக அதிகளவில் பிரபல்யம் பெற்றுள்ளதனையும் காணமுடியும். ஐரோப்பிய நாடான பல்கேரியாவின் பிரதான பயிர்ச்செய்கையாக ரோஜா மலர்ச் செய்கை விளங்குகின்றது. ரோஜா மலர்கள் வளர்க்கப்பட்டு அவற்றின் இதழ்கள் கொய்யப்பட்டு, அதனூடாக ரோஜா எண்ணெய் மற்றும் ரோஜா பன்னீர் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன.

## ரோஜா திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் ரோஜா விளைச்சலைப் பெறும் காலப்பகுதியில் பல்கேரியாவின் கசன்லக் நகரில் ரோஜா திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இந்நிகழ்வில் ரோஜா தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரும் பாரம்பரிய ஆடை




அணிகலன்களை அணிந்து குறிப்பாக, ரோஜா மலர்களை அணிந்துகொண்டு இந்த நிகழ்வில் பங்குபற்றுகின்றனர். இந்த விழா 1903 இல் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பல்கேரியாவின் கசன்லக் நகருக்கு இந்த விழாவானது, தொழில் சார்ந்ததாக மட்டுமன்றி, அந்நாட்டு மக்களின் கலாசார, சமூக வாழ்க்கையுடன் இணைந்த விடயமாகவும் உள்ளது. இந்த ரோஜா திருவிழாவில் மூன்று அம்சங்கள் உள்ளன. காலையில் ரோஜா பயிரிடும் இடங்களில் நடைபெறும் பாரம்பரிய விழா, ரோஜா ராணியினைத் தெரிவு செய்தல் மற்றும் வீதி களியாட்ட நிகழ்வுகள் என்பனவே அந்த அம்சங்களாகும். ரோஜா திருவிழா நிகழ்வின் இறுதி நாளின்போது ரோஜா ராணி தெரிவுசெய்யப்படுவார். அன்றைய தினம் இலவசமாக வைன் பானத்தினை அருந்தும் வாய்ப்பு, உணவு களியாட்ட நிகழ்வு என்பனவும் மிக முக்கிய நிகழ்வுகளாகும்.

## ரோஜா பிரதேசம்

சிரியாவின் டமஸ்கஸ் நகரில் இந்த மலர் இனத்தின் பிறப்பு நிகழ்ந்தது. 17 ஆம் நூற்றாண்டில் பல்கேரியா ஒட்டோமன் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தபோதே அதிகளவான ரோஜா உற்பத்தியும் அது தொடர்பான தொழிற்துறைகளும் ஆரம்பமாயின. இத் தொழிற்துறை காரணமாக, பல்கேரியாவின் ஒரு பகுதி ரோஜா பிரதேசம் என்று அழைக்கப்படுகின்றது. போல்கன் மலையடிவாரத்தில் 130 கி.மீ. வரை பரவியுள்ள இந்த ரோஜா பிரதேசம் ரோஜா செடி வளர்ச்சிக்கு ஏற்ற காலநிலையையும் மண் வளத்தினையும் கொண்டுள்ளது. இரண்டு மலைகளின் நிழலை இப்பிரதேசம் பெறுவதனால் அங்கு குளிர்ச்சியான காலநிலையும் மெல்லிய குளிர்காற்றும் நிலவி செடிகள் பாதுகாப்பாக வளர உதவுகின்றது. மேலும், நடுத்தரமான சூரிய ஒளி ரோஜாக்களின் எண்ணெய் விகிதத்தினை அதிகரிக்க உதவி புரிகின்றது.

## ரோஜா ஆராய்ச்சி நிலையம்

கர்லோவோ மற்றும் கசன்லக் ஆகியன ரோஜா பயிரிடும் தோட்டங்களாகத் திகழ்கின்றன. இவை, இரண்டும் ரோஜா பிரதேசங்களாக உள்ளன. நோவா சகோரா தோட்டங்களின் பகுதியும் இதில் அடங்குகின்றது. உலகின் மிகச் சிறந்த ரோஜா எண்ணெய் இங்கு விளையும் ரோஜா மலர்களில் இருந்தே பெறப்படுகின்றது. ரோஜா எண்ணெய் தயாரிக்கப்படும் இடமாகவும் ஏற்றுமதி செய்யப்படும் பிரதான இடமாகவும் இப்பகுதி புகழ்பெற்றுள்ளது.

பல்கேரியாவில் ரோஜா தோட்டங்கள் உட்பட மேலும் பல ரோஜா தொழிற்துறையில் ஈடுபடும் கிராமப்புறங்களும் உள்ளன. மே மாத நடுப்பகுதி முதல் ஜூன் மாத நடுப்பாகம் வரை வருடத்திற்கு 25 நாட்கள் ரோஜா செடிகளில் மலர்கள் உருவாகின்றன. நறுமணம் கமழத் தொடங்கும் காலப்பகுதியில் கைகளினால் மலர்கள் பறிக்கப்பட்டு சிறிய அளவிலான நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## ரோஜா எண்ணெய்

★ வாசனைத் திரவியங்களின் உற்பத்திக்குத் தேவையான பிரதான மூலப்பொருளாக் ரோஜா எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், சரும வியாதிகளுக்கும் ரோஜா எண்ணெய் அருமருந்தாக உள்ளது.

★ 10 ஆம் நூற்றாண்டில் பெர்சியாவில் வசித்து வந்த அனிசென்னிடம் ரோஜா எண்ணெய் தயாரிப்புக்கூடம் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

★ ரோஜா எண்ணெயினைப் பெறுவதற்காக காலை 8 மணிக்கு முதல் ரோஜா மலர்கள் பறிக்கப்படுகின்றன. ரோஜா மலர்களில் இருந்து நீராவி மூலமும் ரோஜா எண்ணெய் பெறப்படுகின்றது.


பல்கேரியாவின் ரோஜாத் தோட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அமலுக்கும் கமலுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අමල්: කමල්, මේ පාර නම් අපේ නිවාසයට කුසලානය ගන්න ඕනේ.**
கமல், மே பார நம் அப்பே நிவாசயட்ட குசலானய கன்ன ஓனே.
அமல்: **கமல், இந்த தடவையென்றால் எங்கள் இல்லத்திற்கு வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

**කමල්: ඔව් අමල්. අපට ගිය පාරත් තුන්වෙනි ස්ථානය ලැබුනේ.**
ஒவ் அமல். அபட்ட கிய பாரத் துன்வெனி ஸ்தானய லெபுனே.
கமல்: **ஆம் அமல். எமக்கு கடந்த முறையும் மூன்றாவது இடம்தான் கிடைத்தது.**

**අමල්: අපි දැන් අපේ නිවාසයේ අයව හොඳට උනන්දු කරවන්න ඕනේ.**
அப்பி தென் அப்பே நிவாசயே அயவ ஹொந்தட்ட உனந்து கறவன்ன ஓனே.
அமல்: **நாம் இப்போது எமது இல்லத்தவர்களை நன்றாக உற்சாகப்படுத்த வேண்டும்.**

**කමල්: අපි නිවාසයේ අයටම පොඩි තරඟ තියලා හොඳ අයව තෝරමු.**
அப்பி நிவாசயே அயட்டம பொடி தரங்க தியலா ஹொந்த அயவ தோரமு.
கமல்: **நாம் இல்லத்தவர்களிடையே சிறிய போட்டிகளை நடாத்தி திறமையானவர்களை தெரிவுசெய்வோம்.**

**අමල්: ඒක හොඳයි. දැන් ඔයා මොනවටද සහභාගි වෙන්නේ?**
ஏக ஹொந்தய். தென் ஒயா மொனவட்டத சஹபாகி வென்னே?
அமல்: **அது நல்லது. இப்போது நீங்கள் எவற்றில் கலந்துகொள்கிறீர்கள்?**

**කමල්: මම වෙනද වගේම මීටර් 1000 දුවනවා.**
மம வெனத வகேம மீற்றர் 1000 துவனவா.
கமல்: **நான் வழக்கம்போல 1000 மீற்றர் ஓடுவேன்.**

**අමල්: ඔයා කොහොමත් ඒකෙන් පළවෙනි ස්ථානය ගන්නවනේ.**
ஒயா கொஹொமத் ஏகென் பளவெனி ஸ்தானய கன்னவனே.
அமல்: **நீங்கள் எப்போதும் அதில் முதலாம் இடம் எடுப்பீர்கள் தானே.**

**කමල්: ඔව්. ඒත් තව හොඳට පුහුණුවීම් කරන්න ඕනේ. ඔයා මොනවටද සහභාගි වෙන්නේ?**
ஒவ்.ஏத் தவ ஹொந்தட்ட புஹுணுவீம் கறன்ன ஓனே. ஒயா மொனவட்டத சஹபாகி வென்னே?
கமல்: **ஆம். என்றாலும் இன்னும் நன்றாகப் பயிற்சி பெற வேண்டும். நீங்கள் எதில் கலந்துகொள்கிறீர்கள்?**

**අමල්: මම පාපන්දු තරඟයටයි උස පැනීමටයි සහභාගි වෙනවා.**
மம பாபந்து தரங்கயட்டய் உஸ பெனீமடய் சஹபாகி வெனவா.
அமல்: **நான் கால்பந்தாட்டத்திலும் உயரம் பாய்தலிலும் பங்குபற்றுகிறேன்.**



### பயிற்சிகள்

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .............. ගන්න ඕනේ.
2. .............. අයව තෝරමු.
3. පළවෙනි .............. ගන්නවනේ.

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. உற்சாகப்படுத்த வேண்டும்.
..............................................
ii. எவற்றில் கலந்துகொள்கிறீர்கள்?
..............................................
iii. பயிற்சி பெற வேண்டும்.
..............................................




**Has to** எனும் வினைச்சொல்லுடன் ஏதாவதொரு மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்டுள்ள வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம் மற்றும் எதிர்மறை வாக்கியம் ஆகிய மூன்றையும், மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) Does Ajith have to see the land?
அஜித் காணியைப் பார்க்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

* இதே வினா வாக்கியத்தை வேறு விதமாகப் பின்வருமாறும் அமைக்கலாம்.

ஆ) Has Ajith got to see the land?
அஜித் காணியைப் பார்க்க வேண்டியுள்ளதா?

இ) Yes, he has to see the land.
ஆம், அவன் காணியைப் பார்க்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஈ) No, he doesn't have to see the land.
இல்லை, அவன் காணியைப் பார்க்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

* Does Ajith have to see?
அஜித் பார்க்க வேண்டியுள்ளதா?

* Has Ajith got to see?
அஜித் பார்க்க வேண்டியுள்ளதா?

* Yes, he has to see. (Affirmative)
ஆம், அவன் பார்க்க வேண்டியுள்ளது. (உடன்பாடு)

* No, he doesn't have to see. (Negative)
இல்லை, அவன் பார்க்க வேண்டியதில்லை. (எதிர்மறை)

உ) Does Sujatha have to spend more money?
சுஜாதா அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஊ) Has Sujatha got to spend more money?
சுஜாதா அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

எ) Yes, she has to spend more money.
ஆம், அவள் அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஏ) No, she doesn't have to spend more money.
இல்லை, அவள் அதிக பணம் செலவழிக்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

அ) Does this train have to stop at every station?
இந்த ரயில் ஒவ்வொரு நிலையத்திலும் தரித்துநிற்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஆ) Has this train got to stop at every station?
இந்த ரயில் ஒவ்வொரு நிலையத்திலும் தரித்துநிற்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

இ) Yes, it has to stop at every station.
ஆம், அது ஒவ்வொரு நிலையத்திலும் தரித்து நிற்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஈ) No, It doesn't have to stop at every station.
இல்லை, அது ஒவ்வொரு நிலையத்திலும் தரித்துநிற்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவினைக் கலை

# அம்மாவுக்கு ஒரு பரிசு

வீட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்படும் பொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த கைவினை அலங்காரத்தினை உங்களது தாயாருக்கு பரிசளியுங்கள். உங்களது திறமையைக் கண்டு உங்களது தாயார் வியப்படைவதுடன், உங்களை பாராட்டியும் மகிழ்வார்.

**தேவையான பொருட்கள்:**




- அப்புறப்படுத்தப்பட்ட காட்போட் பெட்டி
- பசை
- மின்குமிழ்
- அடிமட்டம்.

**1 ஆவது படிமுறை:**

காட்போட் பெட்டியினை 40 சென்ரிமீற்றர் நீளம் மற்றும் 14 சென்ரிமீற்றர் அகலத்தில் வெட்டிக்கொள்ளுங்கள். பின்னர் அதனை ஐங்கோணி போன்று அமைத்துக்கொள்ளுங்கள்.


**2 ஆவது படிமுறை:**




இந்த ஐங்கோணியினை ஐந்து சமபகுதிகளாக மடிக்கவேண்டும். ஒரு பகுதியின் நீளம் 10 சென்ரிமீற்றராக இருக்கவேண்டும்.

**3 ஆவது படிமுறை:**

இந்த ஐங்கோணியினை 2 சென்ரிமீற்றர் அகலமுடைய 7 வரிசைகளாக வெட்டவேண்டும்.



**4 ஆவது படிமுறை:**




வெட்டப்பட்ட வரிசைகளை முன்பு மடிக்கப்பட்ட ஐந்து மடிப்புகளுக்கு ஏற்ப மடித்து படத்தில் உள்ளவாறான வடிவத்தினைப் பெறுங்கள்.

**5 ஆவது படிமுறை:**

அந்த வடிவத்தினை ஒன்றன்மீது ஒன்றாக வைத்து படத்தில் உள்ளவாறு ஒட்டிக்கொள்ளுங்கள்.




**6 ஆவது படிமுறை:**



இப்போது ஒரு பக்கம் 10 சென்ரிமீற்றராக இருக்கும் ஐங்கோணி ஒன்றினை வெட்டிக் கொள்ளுங்கள்.

**7 ஆவது படிமுறை:**

அந்த ஐங்கோணியின் நடுப்பாகத்தில் துளையிட்டு அதனுள் மின்குமிழ் ஒன்றினைப் பொருத்திக்கொள்ளுங்கள். மின்குமிழின் ஹோல்டர் வெளியில் தெரியும் வகையில் இருத்தல் வேண்டும்.



**8 ஆவது படிமுறை:**



இப்பொழுது நீங்கள் ஏற்கெனவே தயார்படுத்தி வைத்துள்ள ஐங்கோணிகள் தட்டினை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் உச்சியில் மின்குமிழ் பொருத்தப்பட்ட ஐங்கோணியினை மேலே ஒட்டிவிடுங்கள்.

**இறுதியாக**

நீங்கள் இப்பொழுது உங்கள் பணியினை நிறைவு செய்துவிட்டீர்கள். இப்பொழுது மின்குமிழுக்கு மின் விநியோகத்தினை வழங்கவேண்டும்.



**ஆலோசனை:**

இந்த ஐங்கோணி தயாரிப்பின்போது உறிஞ்சும் குழாய், மரப்பலகை போன்றவற்றைப் பயன்படுத்தி புதிதாக முயற்சிகளை மேற்கொள்ள முடியும். எப்பொழுதும் சரியான வடிவம் குறித்து கவனம் செலுத்துங்கள். தேவையெனில் நிறத்தினையும் பயன்படுத்தமுடியும். அத்துடன், மின் இணைப்பு குறித்து அவதானமாக செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்



- காண்டா மிருகங்கள் அதன் கொம்புகளைப் பெறுவதற்காகக் கொல்லப்படுகின்றன. காண்டா மிருகத்தின் கொம்பு எதனால் ஆக்கப்பட்டுள்ளது?

  மிகவும் கடினமான மயிரிழைகளால் ஆக்கப்பட்டுள்ளது



- மொனராகல மாவட்டத்தைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் எவை?

  பதுளை, அம்பாறை, அம்பாந்தோட்டை

- தி.மு. ஜயரத்னா இலங்கையின் எத்தனையாவது பிரதமராவார்?

  15 ஆவது பிரதமர்



- பின்வரும் உலக நாடுகளின் பிரதமர்கள் யாவர்?

  i. ஜப்பான் - ஷின்ஸோ அபே
  ii. அவுஸ்திரேலியா - டொனி அபொட்
  iii. பங்களாதேஷ் - ஷெய்க் ஹசினா
  iv. பாகிஸ்தான் - நவாஸ் ஷெரீஃப்

தொகுப்பு:
உடுவை பரந்தாமன்


ரா.துவாரகன்,
நிவ் லைன்,
நோர்வூட்.
அங். இல: 5988


ஜெ.சதுர்சன்
ஈ.ஏ.குரே மாவத்தை,
கொழும்பு-06.
அங். இல: 5989


எஸ்.திலக்ஷினி,
நாயபெத்த,
பண்டாரவளை.
அங். இல: 5990


அ.அறிவரசன்,
கணேசபுரம்,
கிளிநொச்சி.
அங். இல: 5991

## விஜய் மாணவர் கழகம்


அ.ஷம்லான்,
ஊர் வீதி,
காத்தான்குடி-01.
அங். இல: 5992


ச.நஸ்கத் நதா,
சந்தை வீதி,
ஏறாவூர்.
அங். இல: 5993


எம்.அஸ்மா,
கடுகண்ணாவ வீதி,
கம்பளை.
அங். இல: 5994


எம்.எம்.கைஸ்,
பனாவல வீதி,
எஹலியகொட.
அங். இல: 5995


எஸ்.அப்ரான்,
மதவாக்குளம்,
ஆண்டிகம.
அங். இல: 5996


எம்.ஃபஹ்மன்,
கடாண்டுகம,
புப்போகம.
அங். இல: 5997

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ........................................
முகவரி: ........................................
........................................
பாடசாலை: ........................................
வகுப்பு: ........................................
திகதி: ........................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

# யானை



உலகில் தரைவாழ் பாலூட்டி விலங்குகளில் மிகப் பெரியது யானையாகும். யானைகளில் ஆசிய, ஆபிரிக்க யானைகள் என இரு வகைப்படுத்த முடியும். யானைகள் குழுக்களாக வாழ்வதையே விரும்புகின்றன. இவை தாவரங்களின் இலை, தழை, மூங்கில், பழங்கள் போன்றவற்றையும் விரும்பி உண்கின்றன. சில யானைகள் தந்தங்களைக் கொண்டிருக்கின்றன. இவை ஒரு முறைக்கு ஒரு குட்டியையே ஈனுகின்றன. யானைகள் 45-60 வருடங்கள் ஆயுட்காலமுடையவை. இலங்கையில் மிக விசாலமான யானைகள் சரணாலயம் பின்னவளையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்கு ஏராளமான யானைகள் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

பாத்திமா சப்னாஸ்,
கணமூலை மு.ம.வித்.,

# வளிக்கோளத்தில் காணப்படும் முக்கிய வாயுக்கள்

| | | |
|---|---|---|
| 01. நைதரசன் | (N) | - 78% |
| 02. ஒட்சிசன் | ($O_2$) | - 21% |
| 03. ஆகன் | (Ar) | - 0.93% |
| 04. காபனீரொட்சைட் | ($Co_2$) | - 0.03% |
| 05. நியோன் | (Ni) | - 0.0018% |
| 06. ஹீலியம் | (Hi) | - 0.0005% |
| 07. ஓசோன் | ($O_3$) | - 0.00006% |
| 08. ஐதரசன் | (H) | - 0.00005% |

யோ.கவிப்பிரியா,
இர/அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொடை.

# கோழியும் தவளையும்



ஒரு கோழி முதன்முறையாக முட்டையிட்டது. அந்த மகிழ்ச்சியில் அது பலமாகக் கொக்கரிக்க ஆரம்பித்தது. அந்தக் கோழி பயங்கரமாக கொக்கரிப்பதை பக்கத்திலிருந்த தவளையால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அத்தவளை கோழியைப் பார்த்து, ''கோழியம்மா! ஏன் இவ்வளவு கூச்சல் போடுகிறாய்? என்னால் இதைத் தாங்க முடியவில்லையே.



ஒரு முட்டைக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா?'' என்று கிண்டல் பண்ணியது.

கோழியும், ''என்னுடைய மகிழ்ச்சியைக் கண்டு உனக்கு ஏன் பொறாமை? நான் போட்டது முட்டையாக இருந்தாலும் இந்த அளவுக்காவது ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறேன், அதற்காகத்தான் கொக்கரிக்கிறேன். ஆனால், நீயோ ஒரு காரணமும் இல்லாமல் இரவும் பகலும் கத்துகின்றாய்! அப்படியிருந்தும் உன் கத்தலை நாங்கள் சகித்துக்கொண்டு தானே இருக்கிறோம்'' என்று கோழி கூறியது. தவளையும் வாயை மூடிக்கொண்டது.



வெற்றுக் கூச்சல் போடுகிறவர்களால் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்ய முடியாது.

எம்.எச்.எம்.ஸாலிஹீன்,
மே/மது/றஹ்மானிய ம.வித்., வெலிப்பனை.

# தென்னை

தென்னைமரம் பலவகைப் படுகின்றது. இதிலிருந்தே தேங்காய், இளநீர் என்பன பெறப்படுகின்றன. தென்னை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் மனிதர்களுக்கு அளவிலாப் பயன்களைத் தருகின்றன. அந்தவகையில், தேங்காயில் இருந்து விலங்குணவு,புண்ணாக்கு, எண்ணெய் என்பனவும் தென்னம் பாளையில் இருந்து வினாகிரி, தென்னம்பாணி, தென்னஞ்சீனி என்பனவும் சிரட்டையில் இருந்து அகப்பை, அழகுப்பொருட்கள் என்பனவும் தென்னோலையில் இருந்து பாய், கிடுகு, பெட்டி, தட்டு என்பனவும் தும்பில் இருந்து தும்புத்தடி, மெத்தை, கால்மிதி, தூரிகை, கயிறு என்பனவும் ஈர்க்கிலில் இருந்து, கூட்டுமாறு, அலங்காரப் பொருட்கள் என்பனவும் தென்னஞ் சலாகையில் இருந்து விறகு, வீட்டுத் தளபாடங்கள் என்பனவும் பெறப்படுகின்றன. இவ்வாறு பயன்மிக்க தென்னை மரங்கள், முற்றிய தேங்காய்களின்மூலம் நாற்றுப்போட்டு வளர்த்த பின் தோண்டி எடுத்து குழிகளில் நடப்படுகின்றன.



ஜெ.கருஷ்ணா,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட., கல்முனை.

# துணைவர்கள்



அரவணைக்க அன்னை
வழிகாட்ட தந்தை
அறிவூட்ட ஆசான்
தோள் கொடுக்க தோழன்!

பாசம் காட்ட சகோதரர்
நேசம் காட்ட சகோதரி
பரிவு காட்ட உறவினர்
உதவி செய்ய நண்பர்கள்!

அனைவருமே ஒன்றிணைந்தால்
உற்சாகம் ஊற்றெடுக்கும்
சந்தோஷம் மேலோங்கும்
வாழ்வும் வளமாகும்!

எம்.எம்.எம். முஸ்லிஹ்,
அல்-மதீனா ஆரம்பப் பாட., திகழி.


# பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள்

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| பரீட்சை | தேர்வு |
| போதித்தல் | கற்பித்தல் |
| சர்வகலாசாலை | பல்கலைக்கழகம் |
| அமாவாசை | கார் உலா |
| ஜெயம் | வெற்றி |
| சாஸ்திரியார் | கலைஞர் |
| பிரசாதம் | திருச்சோறு |

நடராஜ் பிரதீப்,
ம.மா/ஹட்/புளியாவத்தை
த.ம.வித்., டிக்கோயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.122



### மேலிருந்து கீழ்

1. சூடம்.
2. மரக்கறியாகப் பயன்படும் இந்த பழத்திலிருந்து சட்னி, சோஸ் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன.
4. உடைகள் தைக்கத் தேவை. (தலைகீழ்)
5. ஐம்பொறிகளில் ஒன்று. (தலைகீழ்)
7. யானை. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. வெற்றுத் தரை.
3. தரையில் கொடியாய்ப் படர்ந்து வளரும் மரக்கறிவகையொன்று.
5. கிணற்றிலிருந்து நீர் எடுக்கத் தேவை. (மாறியுள்ளது)
6. ஆபிரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் இடையில் அமைந்துள்ள கடல்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.121 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மீ | கா | 2 ம | ன் | | 3 சு |
| ட் | | ட் | | 4 வீ | ணா |
| ட | | பா | | 5 சா | மி |
| ல் | ட | ண் | 6 சு | | |
| | | ட | | 7 இ | டி |
| 8 இ | ரு | ம் | பு | | 9 நொ |




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 11.02.2015 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 62
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=
பரிசுப் பொதி




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 60 விடைகள்


போட்டி: 01




போட்டி: 02



போட்டி: 03



நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## 3

ஒவ்வொரு படத்துடனும் பொருந்துகின்ற நிறத்துடன் இணைக்க.



blue

pink

yellow

grey

orange

green

purple


## 1

அருகிலுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு, நிறந்தீட்டுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | B | O | T | A | M | O | T | V | Q |
| X | H | E | A | L | T | H | Y | S | C |
| E | I | R | E | L | P | P | R | H | G |
| G | A | L | M | T | I | T | E | T | E |
| A | S | X | O | N | S | S | S | H | R |
| B | N | Z | U | C | C | H | I | N | I |
| B | C | O | D | A | C | O | V | A | W |
| A | S | M | F | H | R | O | F | N | D |
| C | H | P | E | P | P | E | R | S | J |
| I | H | C | A | N | I | P | S | B | N |
| F | S | T | O | R | R | A | C | B | X |

BROCCOLI
CARROTS
CABBAGE
BEETS
TOMATO
PEPPERS
SPINACH
ZUCCHINI
AVOCADO
HEALTHY

Vegetables Group




Sponsored by

NATARAJ®

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

## 2

நிழற்றப்பட்டுள்ள படங்களுக்குப் பொருத்தமான பின்னத்தில் வட்டமிடுக.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | $\frac{1}{2}$ | $\frac{3}{6}$ | $\frac{5}{6}$ | $\frac{1}{6}$ | $\frac{6}{5}$ |
| 2) | $\frac{1}{4}$ | $\frac{3}{4}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{3}$ | $\frac{1}{5}$ |
| 3) | $\frac{1}{2}$ | $\frac{3}{8}$ | $\frac{1}{6}$ | $\frac{1}{7}$ | $\frac{6}{8}$ |
| 4) | $\frac{1}{3}$ | $\frac{3}{6}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{5}$ | $\frac{1}{4}$ |
| 5) | $\frac{4}{6}$ | $\frac{5}{6}$ | $\frac{4}{5}$ | $\frac{1}{6}$ | $\frac{3}{5}$ |
| 6) | $\frac{1}{3}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{5}$ | $\frac{2}{1}$ |
| 7) | $\frac{1}{2}$ | $\frac{3}{4}$ | $\frac{5}{6}$ | $\frac{1}{4}$ | $\frac{4}{3}$ |

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 60 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
ஜீ.ருக்ஷான், எஹலியகொடை.

**2ஆம் பரிசு**
ச.பிருந்தா, ஹட்டன்.

**3ஆம் பரிசு**
மபாஸ் அஹமட், புவக்பிட்டிய.

**பாராட்டுப் பெறுவோர்:**

- சம்லா சிராஸ், பேருவளை.
- எம்.முன்ஷிஃப், கல்முனைக்குடி-13.
- சு.சிவதாரணி, மஸ்கெலியா.
- கே.யதுர்சனா, சுழிபுரம்.
- சம்லா ஜிப்ரீல், மாத்தளை.
- பஸ்மி, போருதொட்ட.
- பாலா கார்த்திகா, அக்கரைப்பற்று.
- ஏ.ரஹ்மான், பாணந்துறை.
- அப்துல் முஃனி, காலி.
- என்.சிவா, வட்டவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

அலுபொத்த அல் நஸ்ரா முன்பள்ளி பாடசாலை விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் நடைபெற்ற வினோத உடை நிகழ்வொன்றினையே படத்தில் காண்கிறீர்கள்.

(தகவல்: எம்.சீ.எஸ்.அன்ஸார்)



நாவல பைனர் விளையாட்டுக் கழகத்தால் 23 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த மீலாத் நபி விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



இ.அனுசியா,
சன்மார்க்க ம.வித்., யாழ்ப்பாணம்.



சி.வினோத் மகேஸ்குமார்,
அல்-அக்ஸா மு.ம.வித்.,
எஹலியகொட.



எம்.அஸ்பாக்,
க/அஸ்ஹர் கல்., அக்குறனை.



நிஸ்புள்ளா நைய்ப்,
தி/கிண்ணியா மத்திய கல்.,
கிண்ணியா-04.




க.திக்சன்,
சித்திவிநாயகர் வித்., வவுனியா.



இ.ரிஷாத்,
மகாஜனக் கல்., தெல்லிப்பழை.



ஜெ.கேசிகா,
ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்.,
திருகோணமலை.



வி.பிருந்தாபன்,
சிவசக்தி வித்., நற்பிட்டிமுனை-02.



எஃப்.நஸ்லா,
மீ-எல, ஹக்மன.



எம்.றியாஸத்,
சிலா/அல்-ஹிரா மு.ம.வித்.,
கொட்டரமுல்ல.

### பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

# 'ஏலியன்ஸ்' தொடர்பான நீடிக்கும் மர்மங்கள்!



ஏலியன்ஸ் எனப்படும் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான மர்மங்கள் தொடர்ந்து நீடித்த வண்ணமே உள்ளன. உண்மையில் ஏலியன்ஸ் உள்ளனரா? என்பதை கண்டறியும் ஆய்வுகளும் தொடர்கின்றன.

நிஜமாக ஏலியன்ஸ் இருப்பார்களாயின் மனித குலத்தைவிட சிறந்த தொழில்நுட்பங்களைக் கொண்டவர்களாக அவர்கள் இருப்பார்களா? அத்தகைய தொழில்நுட்பங்களை அவர்கள் கொண்டிருப்பின் ஏன் இதுவரை எமது பூமியை அவர்களால் கண்டறிய முடியவில்லை? என்ற பல்வேறுபட்ட கேள்விகளும் கூடவே எழுகின்றன.

சில ஆய்வாளர்கள் ஏலியன்ஸ் உள்ளதாகக் கருதி தமது ஆய்வுகளில் ஈடுபடுகின்றனர். வேறு சில ஆய்வாளர்கள் ஏலியன்ஸ் இருப்பின் எமது தொழில்நுட்பத்தின் மூலம் எமது பூமியின் அமைவிடத்தை நாமே அவர்களுக்கு காட்டிக்கொடுப்பது மிக ஆபத்தான செயல் எனவும் எச்சரிக்கின்றனர். சிலவேளைகளில் எம்மைவிட அவர்கள் தொழில்நுட்பத்தில் உயர்ந்திருப்பின் பூமியை ஆக்கிரமிக்க அவர்கள் வருவார்கள் என்றும் தற்போதைய எமது தொழில்நுட்பத்தைக் கொண்டு அவர்களிடம் இருந்து பூமியைப் பாதுகாக்க முடியாது என்றும் கூறுகின்றனர்.

வேறு சிலர் ஏலியன்ஸ் என்பதே இல்லை. அவை பொய்யானவை என்று வாதிடுகின்றனர். இக்கூற்று சரியாயின் பரந்து விரிந்துள்ள இப்பிரபஞ்சத்தில் பூமியில் மட்டும்தான் உயிரினங்கள் தனித்து விடப்பட்டுள்ளனவா? இது எவ்வாறு சாத்தியமாகும்? எனும் கேள்விகளும் கூடவே எழுகின்றன. ஆனால், இவற்றுக்கான விடைகள் இன்றுவரை அறியப்படாமல் மர்மமாகவே உள்ளன.

## புலமைப்பரிசில் விடைகள்

(ஜனவரி 28 ஆம் திகதி வெளியான வினாக்களுக்கான விடைகள்)

### சுற்றாடல்

| | | | | |
|---|---|---|---|---|
| 01) | 01. 4 | 05. 1 | 09. 2 | 13. 2 |
| | 02. 2 | 06. 1 | 10. 3 | 14. 1 |
| | 03. 2 | 07. 2 | 11. 2 | 15. 3 |
| | 04. 1 | 08. 1 | 12. 1 | |

02) 01. தூக்குக்குண்டு 02. சாந்தகப்பை
03. மணியாசு 04. சீவுளி 05. கைவாள்

03) 01. (✓) 03. (✓) 05. (✓) 07. (✗) 09. (✓)
02. (✗) 04. (✗) 06. (✓) 08. (✗) 10. (✓)

04) 01. உணவாக, ஔடதமாக, வாசனை தைலம், வாசனைப் பொருள், அலங்காரம்
02. செவ்வெறும்பு.
03. தேனீ, வண்ணத்துப்பூச்சி.
04. ★ விளையாட்டுப் பொருட்கள்
★ துப்பரவு செய்யும் உபகரணம்
★ கலைப் பொருட்கள்
05. களனி கங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேகங்கள்

புவியின் மேற்பரப்பு வளிமண்டலத்தில் மிதக்கும் சிறிய நீர்த் துணிக்கைகள் அல்லது உறைந்த பளிங்குத் துகள்கள் ஒன்றிணைந்த ஒரு தொகுதியே மேகம் என அழைக்கப்படுகிறது. புவி தவிர்ந்த ஏனைய கோள்களை சுற்றியும் மேகக் கூட்டங்கள் காணப்படுகின்றன. அண்டவெளியில் நட்சத்திரங்களுக்கு இடையில் காணப்படும் துகள் கூட்டங்களையும் மேகம் என்று கூறுவர். புவியில் ஒடுங்கிக் காணப்படும் நீராவியானது, 0.01 மில்லிமீற்றர் விட்டம் கொண்ட மிகச் சிறிய பனித்துளிகளை உருவாக்குகின்றது.



இது கண்ணுக்குப் புலப்படாத துணிக்கைகளாகும். இவ்வாறான துணிக்கைகளில் பலகோடி சேர்ந்த கூட்டமே 'மேகக் கூட்டம்' என்று அழைக்கப்படுகிறது.

செறிவானதும் ஆழமானதுமான மேகங்கள் 70% - 95% வரையான அலைநீளம் கொண்ட ஒளிக்கற்றைகள் தெறிக்கும் தன்மை கொண்டவை. இதனால்தான் மேகங்களின் மேற்புறம் வெண்ணிறமாகத் தெரிகிறது. மேகத்தின் சிறு துளிகள் ஒளியை சிதறச் செய்யும் தன்மை உடையவை. இதனால், மேகம் அதிகரிக்க, அதிகரிக்க அவற்றின் உட்புறங்களில் ஒளி குறைந்து மேகத்தின் கீழ்ப்பகுதி சாம்பல் அல்லது கறுப்பு நிறமாகக் காட்சி தருகின்றது.

-ஐ

## உலகின் பிரபல்யமானவர்கள்

# சுபாஷ் சந்திரபோஸ்

நேதாஜி என அழைக்கப்பட்ட சுபாஷ் சந்திரபோஸ் ஒரிஸ்ஸா மாநிலத்தில் கட்டோக் (Guttaok) என்ற இடத்தில் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி பிறந்தார். 1943 ஆம் ஆண்டு இந்திய தேசிய இராணுவத்தை (INA) உருவாக்கி 1945 ஆம் ஆண்டு ஆங்கிலேயரை வெளியேற்றும் திட்டத்தோடு வடகிழக்குப் பகுதியில் இருந்து இந்தியாவுக்குள் தேசிய இராணுவத்தை ஊடுருவச் செய்தார். இந்த முயற்சி தோல்வியடைந்தாலும் ஆங்கிலேயர் நாட்டைவிட்டு விரைவில் வெளியேற அதுவும் ஒரு காரணமாயிற்று.

இவர், இந்திய நிர்வாக சேவையில் சித்தியடைந்தும் கொதிபத்திய ஆங்கில அரசுக்குச் சேவை செய்ய விரும்பாமல் சேவையிலிருந்து விலகிக்கொண்டார். பின்னர் நாட்டு விடுதலையில் ஆர்வம்கொண்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தீவிரமாக விடுதலைக்காக உழைக்கலானார்.




மென்மைப் போக்குடைய காந்தி, நேரு ஆகியவர்களைப் போலல்லாது தீவிரப் போக்கைக் கடைப்பிடித்ததனால், அவர்களோடு ஒத்துப்போகாத நிலையில் காங்கிரஸை விட்டு விலகினார். இவருடைய புரட்சிகர நடவடிக்கைகளால் பல தடவைகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

நாளடைவில் இவர் வீட்டுக்காவலில் இருந்து தப்பி ஜப்பானுக்குச் சென்றார். ஜப்பான் அரசின் உதவியுடன் 1943 இல் இந்தியத் தேசிய இராணுவத்தை உருவாக்கினார். மாபெரும் தேசபக்தரும் குறிப்பிடத்தக்க தேசிய விடுதலைப் போராட்ட வீரருமான சுபாஷ் சந்திரபோஸ் 1945 ஆம் ஆண்டு விமான விபத்தில் மரணமடைந்தார் என்று நம்பப்பட்டாலும் இன்றுவரை அது மர்மமாகவே உள்ளது.

## ஓவியம் வரைவோம்

### ரோஜா மலர் ஒன்றை வரைவோம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் சாரணர் உலகம்

# தீ அடுப்பினை மூட்டுவோம்!




சாரண முகாம்களில் தேவைக்கேற்ப பொருத்தமான பல அடுப்பு வகைகள் உள்ளன. அவற்றில் தமது தேவைக்கேற்றவாறான தீ அடுப்பினை இளம் சாரணர் ஒருவர் தெரிவுசெய்துகொள்ளும் வழிவகைகள் குறித்து அவசியம் அறிந்து வைத்திருக்கவேண்டும். அவ்வாறான சில தீ அடுப்புகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## தூக்குத் தூக்கி தீ அடுப்பு




மிகவும் துரிதகதியில் அடுப்பினை தயார் செய்து உணவு சமைப்பதற்கு இந்த வகை அடுப்பு பொருத்தமானதாகும். இதற்கு சாரணர்களாகிய நீங்கள் உங்களது ஈட்டியினைப் பயன்படுத்தவேண்டும். சாரணர் கால்நடை பயணங்களின்போது, உணவு தயாரிப்பதற்கு பயன்படும் இந்த அடுப்பினை பின்வரும் முறைகளில் அமைத்துக்கொள்ள முடியும்.

## வேட்டைக்காரன் தீ அடுப்பு



இந்த அடுப்பு தற்காலிகமாக அமைக்கப்படுகின்றது. காற்றுடனான காலநிலையின்போது பயன்படுத்தக்கூடிய பெரிய மரக்குற்றிகளை சமாந்தரமாக அடுக்கி வைத்து அதற்கிடையில் சிறிய தீச்சுவாலை ஏற்றப்படுகின்றது. குற்றியின்மீது இரும்பு வளையத்துண்டு ஒன்றினை வைத்து, அதன்மீது பாத்திரத்தினை வைக்கவேண்டும். இரண்டு குற்றிகளின் மத்தியில் நன்கு காற்று புகுந்து தீ அணைந்துவிடாமல் நீண்ட நேரத்திற்கு நன்கு எரியும்.

## நட்சத்திர தீ அடுப்பு



நன்கு உலர்ந்த பலமான நான்கு மரக்குற்றிகளைப் பயன்படுத்தி நட்சத்திர தீ அடுப்பினை உருவாக்க முடியும். குற்றிகளின்மீது பெரிய பாத்திரங்களை வைக்க முடியும்.

பி.கு: நீண்ட நேரம் தீச்சுவாலைகள் எரிவதற்கு சாம்பலை உள்நோக்கி தள்ளிவிடும் பொறுப்பு சாரணர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.

## மறுதலிப்புத் தீ அடுப்பு



படத்தில் உள்ளவாறு விறகுகளை அடுக்கிக்கொள்ள வேண்டும். தேவையான உணவுகளை சுட்டு உண்பதற்கும் விறகுகளை உலர வைப்பதற்கும் கூடாரத்தினை நோக்கி ஒளியைப் பெறுவதற்கும் இந்த அடுப்பு உதவுகின்றது.

## பள்ளத்தாக்கு தீ அடுப்பு



நிலத்தில் சிறிய புள்ளம் ஒன்றினைத் தோண்டி அதனுள் பிறிதொரு இடத்தில் காற்று பிரவேசிக்கும் பாதை ஒன்றினை அமைக்கவேண்டும். இதன்படி, இந்த அடுப்பினைத் தயாரிக்கும்போது, காற்று வரும் பாதை குறித்து சாரணர் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

## பிரமிட் தீச்சுவாலை



நீள் குறுக்கு சுவாலையினைவிட, மிகவும் வினைத்திறனான முறையில் இந்த தீச்சுவாலையினை ஏற்றமுடியும். நன்கு திட்டமிட்டு வெட்டப்பட்ட விறகுகளை ஒன்றன்மீது ஒன்றாக பிரமிட் வடிவில் அடுக்கி வைப்பதனூடாக இதனைப் பற்றவைக்க முடியும். வெளிப்புற முக்கோண வடிவ தீச்சுவாலையினூடாக, இந்த தீச்சுவாலை ஏற்றப்படுகின்றது. இது அணையாமல் நீண்ட நேரம் எரியக்கூடியது.

## பாலத் தீ அடுப்பு



பல அளவுகளிலான விறகுகளினால் இந்த தீச்சுவாலையினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பெரிய விறகுக்குற்றிகளில் சிறியளவிலான தீச்சுவாலை ஏற்றப்படுகின்றது. பின்னர் அதில் இவ்விரண்டு விறகுகளும் அடுக்கப்படல் வேண்டும். வெப்பத்தினை தக்கவைக்க இது உதவுகின்றது.

## தகர கொள்கலன் தீ அடுப்பு



சிறிய தகர கொள்கலன் பாத்திரத்தின்கீழ் பகுதியில் துளையிட்டு விறகுகளை அடுக்கி அதனுள் நிரப்பி இந்த அடுப்புத் தயாரிக்கப்படுகின்றது. விறகுகள் எரிந்ததன் பின்னர் மீண்டும் விறகுகள் அதனுள் இடப்படல் வேண்டும். தகர கொள்கலன் பாத்திரத்தின் வாய் பகுதி பெரிதாகும் அளவுக்கு தீச்சுவாலை எரியும் ஆற்றலும் அதிகரிக்கும். விறகுகள் சிலவற்றைப் பயன்படுத்தி பலவித உணவு வகைகளை இந்த அடுப்பின்மூலம் தயாரிக்கலாம்.

## தூக்குத் தீ அடுப்பு



பெரிய மரக்குற்றியைப் பயன்படுத்தி இந்த அடுப்பு நிர்மாணிக்கப்படுகின்றது. படத்தில் உள்ளவாறு இரண்டு ஈட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதில் உணவு சமைக்கும் பாத்திரம் தொங்கவிடப்படும்.

## முக்கோண தீச்சுவாலை



சிறிய அளவு விறகுகளைப் பயன்படுத்தி முக்கோண வடிவில் இத் தீச்சுவாலை ஏற்படுகின்றது. எவ்வித இடையூறுகளும் இன்றி இந்த தீச்சுவாலையினை ஏற்ற முடிவது இதன் சிறப்பம்சமாகும். விறகுகளுக்கிடையில் இடைவெளி இருப்பதனால், காற்றோட்டம் அதிகமாகி தீயின் சுவாலையை தீவிரப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமது சரீரத்தின் பிரதானமான பகுதி தலையாகும். அதில் முக்கியத்துவம் பெறுவது எமது கண்கள். கண்பார்வை என்பது அனைவருக்குமே இன்றியமையாதது. அவ்வாறான எமது கண்பார்வையை வளப்படுத்திக் கொள்ள இயற்கையான வழிமுறைகள் சிலவற்றை நாம் பின்பற்றவேண்டும். நாள்தோறும் இவ்வழிமுறைகளைப் பின்பற்றி எமது கண்பார்வையை கூர்மையாக்கிக்கொள்வதுடன், கண் சார்பான கெடுதல்கள் இன்றி வாழவும் வழிசெய்ய வேண்டும். அவ்வாறான சில வழிமுறைகளை இங்கே பார்ப்போம்.



# எமது கண்களை பாதுகாப்போம்





## கண்களைக் கழுவுவோம்

எமது காலைக் கடன்களை முடித்தவுடன் எமது கண்கள் குளிர்மையடையும் வகையில் குறைந்தது மூன்று, நான்கு நிமிடங்களாவது சுத்தமான குளிர் நீரால் கண்களை நன்கு மூடி கண்ணின் மேல் நீர்படும் வகையில் கண்களைக் கழுவுதல் வேண்டும். கண்ணிலிருந்து வெளியேறும் கழிவுகளையும் மென்மையாக அகற்றுதல் சிறப்பானது.மேலும் பழங்கள், நார் உணவுப் பொருட்களை அதிகம் உள்ளெடுப்பதுடன் போதியளவு நீர் ஆகாரம் உட்கொள்ளலையும் உறுதி படுத்திக்கொண்டு மலச்சிக்கலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

## தகுந்த ஆகாரம்

தினமும் பச்சை இலைக்கறி வகை மற்றும் கெரட், செம்மஞ்சள் நிறப் பழங்கள் போன்ற விற்றமின் A நிரம்பிய உணவுகளை உண்ணல், கண்பார்வைத் திறனுக்கும் செயற்பாட்டுக்கும் பயன்மிக்கதகும். ஈரலில் அதிக நச்சுத்தன்மை சேர்தலும் கண் பார்வை மங்குவதற்கு ஒரு காரணமாகும். இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையும், உடலாரோக்கியத்தை பாதிப்பதாகவே உள்ளது. இப்போதெல்லாம் நாம் அதிகம் உண்ணும் துரித உணவுகள் (Fast Foods) நொறுக்குத் தீனிகள், கடைகளில் பொரித்து விற்கும் உணவுகள் ஆகியவற்றினை அதிகம் நாடக்கூடாது. இதற்குப் பிரதியீடாக பழங்களை உண்ணல் கண்பார்வைக்கு நன்மை சேர்ப்பதாக அமையும்.





## சிறந்த தூக்கம்

நீண்ட நேரம் விழித்திருந்து பல்வேறு கடமைகளில் ஈடுபடுதல் கண்ணிற்கு கெடுதலை விளைவிக்கும். கண்ணிற்கு ஓய்வு கொடுப்பதற்கு மிகவும் சிறந்த செயற்பாடு நித்திரை கொள்ளலாகும். கண்களைப் பாதுகாப்பதற்கான கண் தொடர்பான பயிற்சிகள் பலவும் உள்ளன. இவற்றை காலக் கிரமமாக செய்து வருதலும் சிறப்பானதாகும்.

## மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்திக் கொள்ளல்

வாய்விட்டுச் சிரித்து, மகிழ்ச்சியான சூழலில் நாம் வாழும்போது எமக்குள் சந்தோஷத்திற்குரிய ஹோர்மோன்கள் உற்பத்தியாவதாக கூறப்படுகிறது. இதனால், உடலிலுள்ள செயற்படு தசைகள் அமைதியடைவதாகவும் கூறப்படுகின்றது. இதன்போது கண்ணுடன் தொடர்பான தசைகளும் அமைதி பெறுகின்றன. எனவே, எந்நேரமும் மகிழ்வான, சந்தோஷம் மிக்க சூழலில் நாம் வாழும்போது, அதுவும் எமது கண்களைப் பாதுகாப்பதாகவே அமையும்.

## விளையாட்டுக்களில் விரும்பி ஈடுபடல்

தொலைக்காட்சிப் பெட்டியின் முன்போ அல்லது கணினி முன்போ தொடர்ச்சியாக அமர்ந்திருந்து அவற்றை பார்வையிடுவதும் கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு. இதனால், கண்களுக்கு ஏற்படும் அயர்ச்சியினால் கிட்டப்பார்வைக் குறைபாடோ அல்லது கண்தொடர்பான வேறு குறைபாடுகளோ ஏற்படலாம்.

**திருமதி. நிருபா அருந்தவம்,**
கோப்பாய் வீதி, உரும்பிராய்

# போலந்து

ஐரோப்பாவில் அமைந்துள்ள போலந்து, 18 ஆம் நூற்றாண்டளவில் ரஷ்யா, பிரஷ்யா மற்றும் ஒஸ்ட்ரியா ஆகிய நாடுகளால் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது. 1918 ஆம் ஆண்டு போலந்து சுதந்திரம் பெற்றது. 1999 இல் போலந்து, நேட்டோ அமைப்பில் அங்கத்துவம் பெற்றதோடு, 2004 இல் ஐரோப்பிய யூனியனிலும் இணைந்தது.




**தேசிய பறவை, மிருகம் மற்றும் மலர்**
தேசிய மலர் பொப்பி மலர்
தேசிய பறவை வெள்ளைக் கழுகு
தேசிய மிருகம் ஐரோப்பிய பைசன் மாடு

**இனங்கள்**
96.9% போலந்து
3.1% சிலேசியர், ஜேர்மனியர், உக்ரேனியர் மற்றும் ஏனையோர்

**மொழிகள்**
போலந்து (உத்தியோகபூர்வ மொழி) 96.2%
மொழியற்றோர் 1.3%

**சமயம்**
உரோமன் கத்தோலிக்கர் 87.2%
ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவம் 1.3%
புரட்டஸ்தாந்து 0.4%
இந்து, இஸ்லாம், பௌத்தம் 0.4%
குறிப்பிடாதோர் 10.8%

**அரசியல்**




**இயற்கை வளம்** நிலக்கரி, சல்ஃபர், செம்பு, இயற்கை வாயு, வெள்ளி, பித்தளை மற்றும் பெற்றோலியம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடுகள் வரையும் ஜெட் விமானங்கள்



ஜெட் விமானமொன்று வானில் பறந்து செல்லும்போது, அது செல்லும் பாதை வழியே வெண்ணிறக் கோடொன்று ஏற்படுவதை நாம் அவதானித்திருக்கிறோம். இது ஜெட் விமானத்தின் புகை என்றே பலரும் நினைக்கின்றனர். ஆனால், ஜெட் விமானங்களில் இருந்து வெளிப்படும் புகையோடு, காபனீரொட்சைட்டும் பிற துகள்களும் நிறைந்துள்ளன.

ஜெட் விமானங்கள் மிக உயரத்தில் பறப்பதால் அங்கு வெப்பநிலை குறைவாகவே காணப்படும். அதனால், காபனீரொட்சைட் வாயு குளிர்ந்து- பனிக்கட்டியாகி விடுகிறது. இதனை 'உலர் பனிக்கட்டி' என அழைக்கின்றனர். இதன் துகள்கள் மீது நீராவி படிவதால், அது ஜெட் விமானம் போன பாதை வழியே திரண்டு, வெண்ணிறக் கோடு போன்று காணப்படுகிறது.

-இஷ்ரத்

PUBLIC LIBRARY JAFFNA.

# ஓரே இடத்தில் நீண்ட நேரத்திற்கு அமர்ந்திருப்பது ஆபத்தானது...!



நீண்ட நேரத்திற்கு ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது ஆபத்தானது என அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வினை இஸ்ரேலிய ஆராய்ச்சியாளர்களே மேற்கொண்டிருந்தனர்.



அந்த ஆய்வின் படி, ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருக்கும்போது, ப்ரீடிபோசைட் செல்கள் கொழுப்பு செல்களாக மாறுகின்றன. ஒருவர் ஓரிடத்தில் நீண்ட நேரத்திற்கு அமர்ந்திருக்கும்போது, அழுத்தம் கொடுக்கப்படும் உடற்பாகங்களில் இத்தகைய செல்கள் அதிகரித்து, அப்பகுதியில் கொழுப்பும் அதிகரிக்கின்றது. இதனை 'Mechanical Stretching Load' என்பர்.


ஒரே இடத்தில் அசைவின்றி அமர்ந்து அல்லது படுத்திருப்பதால் இத்தகைய பாதிப்புகள் அதிகமாக ஏற்படுகின்றன. உடலின் ஏனைய பகுதிகளைவிட அமரும் பகுதியிலேயே கொழுப்பு செல்கள் வெகுவாக அதிகரிக்கின்றன. இதனை தவிர்க்கப் போதிய உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு என்பன தேவை. அது மட்டுமன்றி, ஒரே இடத்தில் நீண்டநேரம் அமர்வதைக் கண்டிப்பாகத் தவிர்த்து, அடிக்கடி எழுந்து நடப்பதே ஆரோக்கியமானது என ஆய்வாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

-ஐ

# லேசர் சிகிச்சை

சில நோய்களுக்கு 'லேசர் கதிர்கள்' மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இந்த லேசர் கதிர்கள் மனித உடற்பகுதிகளில் அதிக ஆழத்திற்கு ஊடுருவும் திறன் கொண்டவையாக உள்ளன. அந்தவகையில், மனித உடலில் தோல், மண்டை ஓடு போன்றவற்றில் ஊடுருவிச் சென்று சிகிச்சைகளை மேற்கொள்ள இந்த லேசர் கதிர்கள் பயன்படுகின்றன.

உதாரணமாக: மனித உடலுக்குள் ஏதேனுமொரு பகுதியில் கட்டி ஒன்று தோன்றிவிட்டால், அநாவசியமாக உடல் பாகங்களில் அறுவை சிகிச்சை செய்து இந்த கட்டியை அகற்ற வேண்டியதில்லை. மாறாக, இந்த லேசர் கதிர்களை உடலுக்குள் செலுத்தி அந்தக் கட்டியை கரைக்கவோ அல்லது நீக்கவோ முடியும். இவ்வாறு செய்வதன்மூலம் உடலிலிருந்து அதிகளவு குருதி வீணாகுவதும் உடலில் காயங்கள் ஏற்படுவதும் தடுக்கப்படுகின்றன. அவ்வாறே, சிலருக்கு ஏற்படும் சிறுநீரக கற்களை சிதைத்து, சிறுநீர் மூலமே அவற்றை வெளியேற்றி குணமடையச் செய்யவும் லேசர் சிகிச்சை முறை உதவுகின்றது.



# இவ்வார கார்ட்டூன் படம்








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 04, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org